உ

ஆறுமுகநாவலர்

சிவமயம். ஞாபகப்புதுமுறை—2

வேதவல்லி.

இஃது

யாழ்ப்பாணம் வண்ணைநகர்

"ஆறுமுகநாவலர்" வாசிகசாலை

மானேஜர்,

மா. சிவராமலிங்கம் பிள்ளை அவர்களால்

எழுதப்பட்டு

மாயவரம்

ஆர். வைத்தினதய்யர் அண்டு கம்பெனியாரால்

சென்னை, திருவல்லிக்கேணி.

"வாணீ பூஷணம்" பிரஸ்ஸில்

பிரசுரிக்கப்பட்டது.

1911

"Vani Bhushanam" Press, Triplicane, Madras.

முகவுரை.

இப்பூவுலகிலுள்ள அநேக ஜீவராசிகளுள் மானிடராய்ப் பிறப்பது மிகவும் அரிது. அதினும் இக்காலத்தில் ஸ்திரீஜாதியாய்ப்பிறந்து விட்டால் அவர்களுக்கு அநேக இடையூறுகள் ஏற்படுகின்றன. அதனால் கற்பைக் கைநழுவவிட்டு விபசாரம் என்கிற நரகக் குழியில் வீழ்ந்து கரையேறவழியின்றித் தவிக்கிறார்கள். அப்படிக் கற்பை இழந்து தவிக்கும்படியாகச் செய்யும் இடையூறுகள் பெரும்பாலும் ஏற்படுவது, கொடுஞ்சூரி மாமி, நாத்தி முதலியவர்களாலும் இன்னுஞ்சில காரணங்களாலுமேயெனக் காட்டியும், அப்படிப்பட்ட இடையூறுகள் வந்தவிடத்தும் அஞ்சாது கற்பைக் கைவிடாமல் காத்தால் பிறகு உண்டாகும் சுகங்களை விளக்கியும் நமது நண்பர் யாழ்ப்பாணம் வெள்ளைநகர் ம-ா-ா-ஸ்ரீ சிவராமலிங்கம் பிள்ளை அவர்களால் "வேதவல்லி" என்னும் பெயர்புனைந்த இந்த அரிய புத்தகம் எழுதப்பட்டு எம்மால் நடத்தப்படும் "சர்வஜனரஞ்சனி" யென்னும் மாதச்சஞ்சிகையின் மூலமாய்ப் பிரசுரிக்கப்பட்டது.

இவைகளன்றி, வாலிபர்கள் யௌவனவயதில் சிலருடைய துர்போதனைக் குட்பட்டு தாஸீகமநம் முதலிய துஷ்ட நடத்தைகளுக்காளாகி அதனால் அவர்கள் படுங்கஷ்டங்களையும், ஆபத்காலத்தில் உதவும் ஆப்தநேயர்கள் செய்யும் பேருதவியும் இப்புத்தகத்தில் நன்குவிளக்கிக் காட்டப்பட்டிருக்கின்றன.

ஆகையால் நம்தேயத்துச்சிறுவர் சிறுமியர் யாவரும், இப்புத்தகத்தை வாங்கி வாசித்து நம் கதாநாயகர் கதா நாயகியினிடமுள்ள நற்குண நற்செய்கைகளை உணர்ந்து அவ்விதமே நல்வழிப் படக்கருணாநிதி யாகிய ஜகதீசன் திருவருள்புரிவாராக.

இங்ஙனம்

மாயவரம் R. வைத்திநாதையர்.

13-9-11

உ

வேதவல்லி.

முதலாம் அதிகாரம்.

பூரணிமா சந்திரன் தண்ணிழல் பரப்பிப் பிரகாசிக்கின்றான். மாசமோ சித்திரை மாசமாயிருந்தது. எங்கே பார்த்தாலும் திருமகள் தாண்டவ மிட்டாற் போல ஒவ்வொரு வீடுகடோறும் வெளிமுகப்புக்களில் மின்சார சக்தியினாற் பிரகாசத்தைக் கொடுக்கும் "எலக்டிரிக்" விளக்குகள் சோமனும் நாணும்படி விளங்குகின்றன. நடுமத்தியில் அகன்ற தகழிதளில் நிரம்பி வழியும்படி எண்ணெய் விட்டுக் குதூகலமாய் எரியும்படி குத்து விளக்குகள் வைக்கப் பட்டிருக்கின்றன. பிற்பக்கமாகிய அட்டிற் சாலை "குஜினி" கக்கூஸ் முதலான விடங்களில் மண்ணெண்ணெய் விளக்குகள்வைக்கப் பட்டிருக்கின்றன. சில வீடுகளிலுள்ள கிழவர்களும் கிழவிகளும் தாங்கள் வாலிப காலத்திற் செய்த தந்திரங்களையும் வெற்றிப் பிரதாபங்களையும் ஒன்றைப் பத்தாகப் புளுகிப் புளுகிக் கேட்போர் இக்கிழத்திகதை எப்போ முடியுமோ வென்று வெறுக்கும்படி கூறுகின்றார்கள். சில வீடுகளில் உள்ள சதிபதிகளாயுள்ளோர் பருவம் அடைந்திருக்கும் தங்கள் பெண்மணிகளதும், கல்வி கற்றுக் கௌரவப் பட்டம் பெற்று வசிக்கும்பிள்ளைகளதும் விவாகத்தைக் குறித்தும் சம்பாஷித்து அதனால் உண்டாகிய ஊடல்களைத் தாங்களே ஒருவர்க் கொருவர் தீர்த்துக் கொள்ளுகின்றார்கள். சில இல்லங்களில் உள்ளவர்கள், வயசு பின்னிட்டமையினால் உண்டாகியபலவீனத்தினால் கபம்நெஞ்சிலடைக்க இருமிஇருமி அலுத்துப் பிரபஞ்ச வாழ்வில் வெறுப்புற்றுச் சிவனே! இக்கட்டை எப்போத் தான் றொலையுமோ சோற்றுக்குச் செலவாயும் பூமிக்குப் பாரமாயும்

இருக்கின்றோமே என்று வருந்திக் கஷ்டப்பட்டு அழும் சத்தமும் நிரம்பியிருக்கின்றன. சில மனைகடோறும் சோர நாயகர்களைக் கூடிச் சுகிக்கும் விபசாரிகளும் சோரத்தனமாக ஆசை நாயகிகளை அணைய எதிர் பார்த்திருக்கும் விட புருஷர்களும் நிலாபதி களங்கமற்றுப் பிரகாசித்தல் இடையூறாக விருக்கின்றதே யென்று வருந்திச் சங்கடப் படுகின்றார்கள். இவ்விபசாரவனிதையரிற் சிலர் வேறு காரணங்களை வைத்துக் கொண்டு தம் கைக் குழந்தைகளை அடித்து இம்சிக்கின்றார்கள்.

காசின் மேல் ஆசையுற்ற மோசச் சிந்தையுள்ள தாசிகள் நோய் கொண்ட தேகத்தைப் பல விதமான பட்டாடைகளினாலும் வெல்வெட் ரவிக்கைகளினாலும் மறைத்து அத்தர் புனுகு சவ்வாது முதலிய வாசனைத் திரவியங்களைப் பூசி, சுகந்த பரிமள வில்வாதித் தைலங்களைக் கூந்தலில் அணிந்து மல்லிகை முல்லை முதலியவைக ளாற் றொடுக்கப்பட்ட மாலைகளைத் தரித்துக் கண்டோர் எவரும் இவர்கள் தேவலோக அரம்பையர்களோவென ஐயறும் வண்ணம் ஒவ்வொரு வீட்டு மேன்மெத்தைச் சாளரங்கடோறும் ஒவ்வோர் சந்திரன் உதித்தாற் போலத் தம் முகங்களை வெளியே நீட்டி விட புருடர்களைத் தேடுகின்றார்கள். உத்தமிகளான பதிவிரதாமணிகள், நாயகர்களுக்குச் செய்ய வேண்டிய பணிவிடைகளிற் கண்ணுங் கருத்து மாயிருந்து அதில் ஓர் குறை வாராதபடி நடந்து நாயகர்களை மகிழ்விக்கின்றார்கள். மகன் இறந்தாலும் மருமகள் அமங்கலியாகப் போகட்டும் என எண்ணும் சில கொடுஞ் சூரிமாமி யார்கள் நாட்டுப் பெண்களிடம் வீட்டு வேலைகளை யெல்லாம் குறை வறவாங்கி "எங்கே தலையணை மந்திரங் கூறிப்புதல்வர்களைத் தங்கள் மீது பற்றில்லாதவர்களாக்கி விடுகிறார்களோ" வெனப்பயந்து இராத்திரி காலங்களில் நாயகர்களோடு சயனிக்கவிடாது மருமக் கண்மாரைக் கொன்று போடப் பல விதமான துர்யோசனைகளை யோசிக்கின்றார்கள். சில வீடுகளிலுள்ள புருஷர்களுடைய ஊடலை மனைவியும் நாயகியுடைய கோபத்தை நாயகனும் மாற்றிக் கொள் ளுகின்றார்கள்.

இவ்வாறாகிய சம்பவங்கள் எல்லாம் நிகழப் பெற்ற 1878-ம் ஆண்டு சித்திராபூரணைத் தினத்தன்று சென்னை மாநகரத்தில் அரண்மனைக்காரவீதியில் 18ம் இலக்கம் உடையதும் மூன்று கட்டு

மெத்தை யுடையதும் கலசமாளிகை என்னும் பெயருடையதுமான ஒரு வீட்டின் இரண்டாங் கட்டு மெத்தையில் வடக்குப் பக்கமாக மேற்கு வாசலையுடைய ஒரு அறையில் சுமார் பதினெட்டு வயசு நிரம்பியும் நிரம்பாமலும் இருக்கும் பக்குவமுடைய ஒருபெண்மணியானவள் கண்ணாடிக்குச் சமானமாகிய கபோலத்தில் மலர்க்கரத்தை வைத்து இருகண்களினின்றும் நீர் சொரிய அழுது கொண்டிருந்தாள். குறித்த அறை முழுவதும் மின்சாரத்தினாலுண்டாகிய சிறுதென்றலானது மனோகரமாகப் பரிமளித்துக் கொண்டிருந்தது. அத்தோடு "எலெக்டிரிக்" விளக்கு எரிந்து கொண்டிருக்கின்றது. நான்கு பக்கமும் நிலைக்கண்ணாடிகள் வைக்கப்பட்டு இடையிடையே பலமேதாவிகளால் நூதனமாக வியற்றப்பட்ட அநேக பிரதிமைப் படங்கள் தத்ரூபமாக வைக்கப்பட்டிருக்கின்றன. அவ்வறையின் ஒரு பக்கத்தில் பல வித விசித்திரவேலைகள் அமைந்த ஓர் கட்டில் காணப்படுகின்றது. அதன் மத்தியில் வெண்பட்டினாற்றைத்து இலவம் பஞ்சு செலுத்திய மெத்தையும் தலையணைகளும்காணப்படுகின்றன. அதற்குச் சிறிது தூரத்தில் ஒருவட்ட மேசையின்மீது பளிங்குக் கிண்ணங்கள் வைக்கப்பட்டு அவைகளில் பனினீர் விட்டுப் பலவிதச் செடிகளுண்டாக்கப்பட்டு அவைகளின்மலர் மணம் இவ்வறை முழுவதும் பரிமளித்துக் கொண்டிருக்கின்றது.

மேற் குறித்த அறையிற்காணப்பட்டவிண்மடவாரனையபெண்மணியானவள்சோகவாரிதியில் மூழ்கிக்கரையேற முடியாதவளாய்க் கூறுகின்றாள். பொன் பொலியுங் கொன்றைப் புரிசடையாய்! இப்பாடுபடவோ இந்த எளிய ஜனனம் எடுத்தேன். தாந்தாமுன் செய்த வினை தாமே அனுபவித்தல் வேண்டும். அந்தோ! நான் இந்நகரிற் பிரபலம் பெற்று விளங்கிய பிரபுவும் ஹைக்கோட்டு வக்கீலுமாய் இருந்து இறந்துபோன பால சுந்தர முதலியாரின் அருந்தவத்தினால் அவருக்கு ஏக புத்திரியாகப் பிறந்து செல்வமாக வளர்க்கப்பட்டு ஷ்டி கோர்ட்டு முதல் நீதிபதியாயிருந்து சென்றுபோன மாணிக்கவாசக முதலியார் பீ ஏ பீ எல் அவர்களின் புத்திரரைக் கடிமணஞ் செய்தும் முன் ஜெனனங்களிற் செய்து கொண்ட கன்ம வசத்தினால் இக்கஷ்டங்களை யெல்லாம் அனுபவிக்கின்றேன். நான் என்னுடைய நாயகனின் வீட்டுக்கு வந்த மூன்று

வருட காலமாக அவரும் நானும் பாலும் நீரும் போலவும், அன்றிலும் பேடும் போலவும், கரும்பும் இரசமும் போலவும் நேசமாக வாழ்ந்து வந்தோமே. அதற்கு இடையூறாக எனது நாயகனின் அன்னையும், பிதாவின் சகோதரியுமாகிய சிவகாமி என்னும் கொடுஞ்சூரி மாமியார் எனக்கு விரோதமாகத் தாசி தேனுமணி என்பவளோடு எனது நாயகன் நேசமாயிருக்கும்படி செய்து விட்டனளே. தாசியுமோ தனது குலாசாரப்படி எனது நாயகருக்கு மயக்க மருந்திட்டு அவரைத் தன் வசப்படுத்திக்கொண்டனள். மருந்தின் மகிமையினால் அவரும் அவளே சதமென நம்பி அவள் வீட்டிற் கிடக்கின்றனர். இன்று ஏதோ எனக்குத் தெரிந்த கல்வியறிவினால் எனது நாயகரை வணங்கி ஐயா! தாசி வீட்டிற்குப்போவது எக்காலமும் கெடுதியே. அவர்களிடம் சகவசிப்போர் சகித்தற்கரிய துர் வியாதிகளுக்கு ஆளாகிக் கால் தேயத்தேய வைத்தியன் வீடலைந்து ஈற்றில் அகால மரணமடைவார்கள். இவ்வாறாக இறந்தவர்களை நமது கண்ணாற் கண்டிருக்கின்றோம். அவர்கள் கொடுக்கும் இன்பம் தொடக்கத்திற் கரும்பு போலிருந்து பின் நஞ்சு போலாகிக் கொன்றுவிடும். அவர்களுக்குப் பணமே கடவுளாகும். தம்மிடம் இன்பம் அனுபவிக்கும் நாயகர்கள் எத்துணை உயர்ச்சி உடையவராயினும் பணத்தின்மேற் கண்ணாயிருந்து கவருவார்கள். இவர்கள் எத்தனை இளையார் புணரினும் இளையார். இவர்களிடம் மெய்யன்பு கிடைக்கவே கிடைக்காது. இது பற்றியன்றோ ஒரு மேதாவியாரும்:—

“ஆடவர் முத்தமீவா ரவர்களு முத்தமீவா
ராடவர் தனங்களீவா ரவர்களுந் தனங்களீவா
ராடவாசையீவா ரவர்களுமாசையீவா
ராடவர் மெய்யன் புள்ளா ரவர்களோ மெய்யன் புள்ளார்

என்று கூறியிருக்கின்றார். மோக மூட்டிப் போகம் விற்றுத் தேகத்தைக் கெடுத்து விடுவதே அவர்களது குலத்தொழிலாகும்.

ஆகையினால் பிராண நாயகா! அடியாள் மீது இரக்கங்கொண்டு தங்கள் பொருட்டும் இவ்வாண்மகவின் பொருட்டும்இனிமேல் தாசி வீட்டுக்குப்போகவேண்டாம் என்று இரங்கி அழுததற்குப் பரிசாக இதோ மாட்டியிருக்கும் குதிரைச் சவுக்கினால் நையப்

புடைத்து விட்டுத் தேனுமணி வீட்டுக்குப் போயினர். அந்தோ! காதகியினுடை மயக்க மருந்து அவருடைய சீவகாருண்யத்தையும் என் மீது கொண்ட மெய்க்காதலையும் கெடுத்து விட்டனவே எனக் கூறித் தன் பக்கத்தே தொட்டிலில் நித்திரை செய்யும் தன் சிறுவனைப் பார்த்து "அரும்பாலகா! உனது பிதாவானவர் எப்பொழுது தான் என் மீது பழையமெய்க்காதல் கொள்வாரோ? நீ சிறுவனாக விருப்பதும் அதற்கு இடையூறாக விருக்கின்றதே எனக் கூறித் துக்கித்துக் கொண்டிருந்தாள்.

அவ்வமயத்து அடுத்த வீட்டு ஏகாம்பர முதலியாரின் புத்திரியாகிய கனகமணி என்னும் காந்தாமணியானவள் பொழுது போக்குதலினிமித்தமாகத் தன்னிடம் இருக்கும் பிரதித் தொனி யந்திரமாகிய "கிராம்போன் என்னும் வாத்தியத்திற்குச் சாவி கொடுத்து "அரியானை" என்னும் தேவாரம் அமைத்துள்ள "ரிக்கார்டை" வைத்து விட அது இன்னோசையோடு தேவாரத்தைப் பாடி முடித்தது. இவ்விரண்டு வீட்டுக்கும் மத்தியில் ஓர்சுவர் மாத்திரம் இருந்தது. அவ்வாத்தியச் சத்தத்தினால் தன் விதியைநினைந்து துக்கப்பட்டுக் கொண்டிருந்தவளும் கதா நாயகியுமாகிய வேதவல்லியின் கைக் குழந்தையானது திடுக்கிட்டு நித்திரை நீங்கி அழுதது. அவளும் குழந்தையைத் தூக்கி மடிமீது வைத்துப் பாலூட்டி நித்திரையாக்கிய பின் குயிலும் நாணும்படி அதைப்பார்த்து ஆறுமையோடும்

"அரும்பால காமுனம் பூ மணஞ் சொற்பொரு ளாக முயிர்
கரும்பாஞ்சுவையெள்ளுமெண்ணெயும்போலொத்தகாதலரைப்
பெரும்பாலினல் லன்னங் கங்கா சலத்தைப் பிரிப்பதுபோற்
சுரும்பாம் புலவர் யமனு சைக்கெனத் தோற்றினையே"

என்று கூறி அவ்வமயத்திருந்த மனவருத்த மிகுதியினால் பாலனைப்பழித்துச் சிறிது நேரஞ் சென்றபின் நித்திரையாயினள்.

முதலாம் அதிகாரம்

முற்றிற்று

—∘∘❖∘∘—

இரண்டாம் அதிகாரம்.

அற்றை நாட் கழிந்து வைகறை விடியல் செல்ல, கரு மணியாளிப் புத்தேள் கையுறைபாக வாங்கோர், பருமணி நீட்டிற் றென்னப் பானு வந் துதையஞ்செய்தான். அக்காலை, யௌவன நாயகிகள் பொற்றொடி யணிந்து சிற்றிடை நுடங்கத் தத்தம் நேசியராம் தத்தை மொழியாரோடு ஆற்றங் கரையை அடைந்து சந்தியாவந்தன செப தபங்களை முடித்துக் குடங்களில் நீர் நிரப்பிக் கமலக் கைகள் சிவக்கத் தாங்கித் தத்தம் வீடுகடோறும் போகின்றார்கள். பொன்னனைய இம்மின்னனை யாரிடையே கன்னல் மொழிக் காரிகையாம் வேதவல்லியும் அன்ன நடையும் பின்னிடக் கொடியிடை நுடங்கக் கவலை நிரம்பப் பெற்ற முகத்தோடு நடந்து தன் வீட்டு வாயிலைக் கிட்டி உள்ளே போய் அட்டிற் சாலையை அடைந்து தண்ணீர்க் குடத்தைக் கீழே இறக்கி வைத்து விட்டு தன் நாயகனுக்கினிய உணவுகளைச் சமைக்கின்றாள். அவ்வில்லத்தின் கண்ணே அட்டிலமைக்கும் கெட்டிக் காரிகளான பல பணிவிடைக் காரிகள் இருந்தாலும்,

> ''மாசிலாக் குலத்து வந்தாள் வருவிருந்துவப்ப ஊட்டும்
> நேசமிக் குடையாள் கொண்கன் நினைப் பறிந்தொழுகு நீராள்
> தேசுருவாய்மையுள்ளாள் சினந்திடல் என்று மில்லாள்
> பேசுதிண் கற்புவாய்ந்தாள் பெற்றதே கொண்டு வப்பாள்''

என்றபடி வருகிற விருந்தை உவப்ப உண்பிக்கின்ற அன்பானது இடை யீடின்றி இருக்கப் பெற்ற விசிட்ட முடையளாய் இருந்தனள். அத்தை சிவகாமிக்கும் இவள் வேலை செய்வது சந்தோஷமாகவே யிருந்தது.

சிறிது நேரஞ் சென்ற பின் வெள்ளியங்கிரிக் கிறைவன் கள்ளவேடங் கொண்டு வந்தாலொப்பப் பொறிகள், கெட்டவழியே செல்லாது அடக்கும் ஆற்றலுடையவரும், நன்மையே புரிதல்

வேண்டுமென்னும்தூயசிந்தையரும் அடக்கமும்பொறையும்கருணை யும் செயற்கருந்தவத்தினுற் பெற்றுக் கொண்ட வரும் பெருந் தன்மை யுடைய வருமான ஒரு மகான் நீர்க்காவி யேறிய வஸ்திர தாரியாய் விபூதியை உத்தூளன திரிபுண்ட்ரமாக அணிந்து அக்க மணிகளை அவ்வத்தானங்களிற் றரித்து நரைதிரைமுதிர்ந்து கையிற் பிக்ஷா பாத்திரம் தாங்கி அவ்வீட்டு வாயிலில் நின்று சிவசங்கரா! காளகண்டா! மகாதேவா!என்று கூறிக் கேட்போர் மனம் உருகும் படி,

"ஆங்கார மு மடக்கியைம் புலனைச் சுட்டறுத்துத்
தூங்காமற்றூங்கிச் சுகம் பெறுவ தெக்காலம்"

அம்மா பரதேசிக்குப் பிக்ஷை இடல் வேண்டும் என்றனர். பதிலில்லை, சிறிது நேரஞ் சென்ற பின் துறந்தார் மீட்டும்.

"அத்தமும் வாழ்வு மகத்து மட்டே விழியன் பொழுக
மெச்சிடு மாதரும் வீதி மட்டே விம்மி விம்மியிரு
கைத்தலைமேல் வைத்தழுமைந் தருஞ்சுடுகாடும்
பற்றித்தொடரு மிருவினைப் புண்ணிய பாவமுமே"

என்று கூறிச் சிறிது நேரம் மௌனமாக நின்றார். வேதவல்லியும்

"சிவனடியார்க் குன் பிலாச் சிந்தையே யிரும்
பேவல் செய்து நாளு,
மவனடியார் திறத்தொழு காவாக்கையே மாஞ்
செவி கண்ணுதியைந்தும்
பவனடியாரிடைச் செலுத்தாப் படிவமேபாவை
மறைபரவுஞ் சைவ
தவநெறியல் லாத நெறியேபவநெறி
யென்றளியளாய்த் ....

தபங்கிக் கொண்டிருப்பவளாதலின் கார்காலத்தைக் கண்டமயிலைப் போல ஆனந்தசாகரத்தில் மூழ்கி பிக்ஷையைக் கையில் எடுத்துக் கொண்டுவந்து மண்டலம் புகழும் பகானுக்குக் கொடுத்துவிட்டு அவரிடம் விபூதிப் பிரசாதம் பெற்றுக் கொண்டு திரும்பி உள்ளே போயினுள்.

அப்பொழுது "படைமுகத்திற் பண்டாரம் வந்துபுகுந்தாற் போல" மூத்தாளைவிட்டுப் பிரியமனமில்லாதவளாய்வெகுசிரமப்பட்

டுப் படுக்கை யறையினின்றும் வெளியே வந்தாளையா காமுகிசிவகாமி. மேதினியில் இவள் போலக் கொடிய பெண்ணைத் திசைமுகன் சிருஷ்டித்திருக்கவே மாட்டான். பூவுலகிலுள்ள பாதகங்களையெல்லாம் ஒருருவாகச் சிருஷ்டித்திருப்பானென்றே சொல்லுதல் வேண்டும். அயல்வாழ மனம்பொறாத அசடு. போரசைப் பெட்டகம். இவ்வாறாகிய குணங்களெல்லாம் வஞ்சகம் இல்லாமல் அமையப்பெற்ற இவள் தனதுநாட்டுப் பெண்ணாகிய வேதவல்லி யானவள் சந்நியாசிக்குப் பிச்சையிட்டுச் சென்றதைத் தன் கண்ணாற் கண்டுவிட்டனள். சகித்தற் கரிய கோபங்கொண்டாள். இவள்கொண்டகோபம் கருவுயிர்த்துக்கிடக்கும் ஓர் சுணங்கன்மீது கல்லை வீசினால் அது எவ்வாறு சீறிப்பாயுமோ அவ்வாறு போல விருந்தது. ஆ! இஃதென்னை பெரிமூவாயிருக்கின்றது "தான் தேடாப்பொன்னுக்குமாற்றுமில்லை உரையுமில்லை" யென்பார்கள். அதுபோல இந்தப் படவாச்சிறுக்கியும் இவ்வீட்டிலுள்ள பொருள் பண்டங்களை யெல்லாம் ஆண்டிகளுக்கும் பரதேசிகளுக்கும் வாரிக்கொட்டுகின்றாளே. அந்தோ! கேள்விமுறையில்லையா "நல்லமாட்டுக் கொருசூடு நற் பெண்டாட்டிக்கு ஒருவார்த்தை" என்று சொல்லுவார்கள். இவளுக்கு நேற்றிரவு என் மகன் அடித்த அடி கொஞ்சமா? அத்துடனாவது இவளுக்குப் புத்தி வந்ததா இல்லை! இல்லை!! என்று கூறி மேகம் முழங்கி இடியிடித்தாற் போல ஆரவாரித்தாள். சினந்திடல் என்றுமில்லாச் செல்வியாகிய வேதவல்லி யானவள் பதில்வார்த்தை ஒன்றும் பேசாது வேங்கைக்கு முற்பட்டமான்போல அவளுக்குமுன்வந்துஉபசரித்து காலைப் போசனங் கொடுக்க அவள் தன்பாழ்வயிற்றை நிரப்பி ஏப்பமிட்டுத் தாம்பூலந் தரித்துக்கொண்டுவெளிவாசலில்வந்துயார் வீட்டுத் தலைவாசலில் தன்னைப்போல வேலையற்ற பெண்கள் இருந்து வீண்பொழுது போக்குகிறார்களெனப் பார்த்தபோது "குடிகொடுக்கும் குண்டுணிச் சங்கக் காரியதரிசியாகிய கோகிலாம்பாள் தன் வீட்டுவாசலில் இவளைப்போலவே பொழுதுபோக்க வழியின்றி வந்திருந்து யோசித்துக் கொண்டிருந்ததைக்கண்டு விரைவாக அவ்வீட்டு வாயிலையடைந்து கோகிலாம்பாள் இருந்த தெற்றிமீதேறி அவளுக்குப் பக்கத்தேபோய் முதுகிற்றட்டி என்னமன்னி பலமாக யோசித்துக்கொண்டிருக்கின்றாய் என்று கூறினாள்.

கோகிலாம்பாள்:—யாரது? சிவகாமியா? சந்தோஷம்! ஏன் நிற்கின்றாய்? இப்படி உட்காரு;ஏது இந்தப் பக்கத்தில் உன்னைக் காண்பது அருமையாக விருக்கின்றது:

சிவகாமி:—வீட்டுக் காரியம் பார்ப்பதிலேயே நேரம் போய் விடும், எனக்கு நாட்டுப் பெண்ணென்று வந்தாளே புண்ணியவதி பாவம்! நமது சமையனாருடைய மகள் நமது சொல்லுக் கடங்கி நடப்பாள் என்று நினைத்து எனது குமாரனுக்கு மனையாளாகக் கொண்டேன். கிணறு வெட்டப் பூதம் புறப்பட்டாற் போல நமது எண்ணத்துக்கு மாறாகவே நடக்கிறாள். கொண்டபுருஷன்மீது பற்றின்றி நடந்ததினால் அவன் தாசி தேனுமணி வீட்டிலேயே கிடக்கின்றான். அருமையாகச் சம்பாதித்த பொருள்களெல்லாம் அநியாயமாகப் போகின்றன. அவள் கெட்டிக் காரியாக விருந்தால் அவன் தாசி வீட்டுக்குப் போக விட்டிருப்பாளா? இவைகளை யெல்லாம் உற்று ஆலோசிக்கும் போது தீராத் துயரத்துக் கிடமாக விருக்கின்றது.

கோகிலாம்பாள்:—பார்! சிவகாமி! வீட்டுக்கு வீடு வாசற்படியாகத் தானிருக்கின்றது. எனது மகன் கோபாலகிருஷ்ணனுடைய ஆத்துக்காரி நாகரத்தினம் இருக்கின்றாளே யாழ்ப் பாணத்தாள் அவளை எனது மகன் கோபால கிருஷ்ணனுக்கு விவாகம் செய்து தந்து விடல்வேண்டு மென்று யாழ்ப் பாணத்திலிருந்து அருணாசலம் பிள்ளை யென்பவர் பட்ட பாடுகொஞ்சமா? அவர் எனக்கு எழுதிய கடிதங்கள் ஒன்றா பத்தா? என்ன செய்யலாம். அவர்களுடைய இன உரிமை போய் விடுகிறதே யென்று சம்மதித்து முடித்தேன். எனக்கு எள்ளளவும் விருப்பமில்லை. அந்த இடை வயசிற் போன எனது வீட்டுக்காரர் ஒரே பிடிவாதமாய் நின்று விவாகத்தை முடித்து விட்டுப் போய் விட்டார். அவருக் கென்ன அநுபவிக்கிறவள் நானல்லவோ? ஆனால் கடவுள் எனக்கு ஒரு நன்மை செய்திருக்கின்றார். எங்களுண்டய குடும்பக் கலக்கத்தை என் கண்ணாற் காணாதபடி. அவனையும் மனைவியையும் இங்கு இல்லாமல் யாழ்ப்பாணத்திலேயே இருக்கும்படி செய்திருக்கிறார். இரண்டு தினங்களுக்கு முன் அங்கிருந்து ஓர் கடிதம் வந்தது. கோபால கிருஷ்ணன் எழுதிய கடிதத்தை வாசிக்கும் பொழுது என்வயிறுபற்றி யெரிகின்றது.

சிவகாமி:—ஏது மன்னி! "உரல் மத்தளத்திடம் முறையிட்டாற் போல" விருக்கின்றது. நான் நாலைந்து வருஷங்களுக்கு முன் யாழ்ப்

ரயாணம் போயிருந்த போது உனது நாட்டுப் பெண் நாகரத்தினத்தைப் பார்த்தேன். அவளுடைய அடக்கமான குணமும் சாந்தமான பார்வையும் மற்றும் சகல நற்குண நற்செய்கைகளும் என்னை மயக்கி விட்டன. நான் அப்பொழுது எனது மகனுக்கு மனைவியாக்க விரும்பினேன். விதிமாறிவிட்டது. இப்பொழுது சொல்லுகிறதைப் பார்த்தால் எனக்கு ஆச்சரியமாக விருக்கின்றது. அவள் செய்யும் துஷ்ட கிருத்தியம் இன்னதெனச் சொல்லு பார்ப்போம் என்றனள்.

அப்பொழுது புதினங்களையும் தபால்களையும் ஓர் கட்டாகக் கட்டி அவைகளை ஓர் சாக்குப் பையிற் போட்டுத் தோளில் மாட்டியபடி ஓர் தபாற் சேவகன் இவர்கள் வீட்டு வாசலிற்றங்கிப் பையைத் திண்ணை மீது வைத்து,

ஸ்ரீமதி கோகிலாம்பாளுக்குக் கொடுப்பது
22-நம் அரண்மனைக்கார வீதி
சென்னை.

என்னும் மேல் வாசகம் எழுதப்பட்ட ஓர் கடிதத்தை எடுத்துக் கோகிலாம்பாள் கையிற் கொடுத்து விட்டுத் திரும்பிப் போனான். கடிதத்தைக் கையில் வாங்கிய கோகிலாம்பாள் சிவகாமியைப் பார்த்து நான் கூறியவைகளை யெல்லாம் நீ நம்பவில்லை போலிருக்கின்றது; பார் இக்கடிதத்தை இன்னும் திறந்து பார்க்கவில்லை; சோதிடம் சொல்லுகிறேன். கோபாலகிருஷ்ணன் குடும்பக்கவலையைப்பற்றி அதிலும் விசேஷமாகத் தனது மனைவியைப் பற்றியே எழுதியிருக்கின்றான் என்று கூறிக் கடிதத்தைத் திறந்து வாசித்து விட்டுப் பெருமூச்செறிந்து நான் சொன்னது சரியாகவே யிருக்கின்றது. இதோ வாசித்துப் பார் என்று அவள் கையிற் கொடுக்க அவள் வாங்கிப் பின் வருமாறு வாசிக்கின்றாள்.

கடிதம்.

சொக்கநாத சுவாமி திருவருளை முன்னிட்டு வாழும் தேவரீர் அம்மாள் அவர்கள் செம்பொற் பதும பாதங்களைச் சிரமேற் சூடி அடியேன் கோபால கிருஷ்ணன் எழுதிக் கொள்ளும் விண்ணப்பம். அம்மே! அடியேன் தங்களுக்கு முன் பல கடிதங்களனுப்பியும் ஒன்றுக்காவது பதிலனுப்பாதது அதிசயமாகவிருக்கின்றது. நிற்க;

"தாக முற்று வருந்தினு னொருவன் கானற் சலத்தைக் கண்ணுற்று அவ்விடத்துச் சென்று மயங்கித் தியங்கினாற் போல

மானிட ஜெனன மெடுத்து அஞ்ஞான பாசத்துட் சிக்கி அப்பாசத்தை நீக்க முடியாமல் அல்லற்பட்ட எனக்குத் தாங்களும் தந்தையாரும் இல்லறவாழ் வென்னும் இடற்றலை மாட்டி விட்டீர்கள். அம்மவோ! நான் இல்லாச்சிரமத்திற் புகுந்து எடுத்த சுகம் போதும்! போதும்!! இது பற்றியன்றோ ஓர் தவசிரேஷ்டரும்,

"முன்னருள்பாச முயக்கறுக்க வேண்டிய நான்
பின்னுமொருபாசம் பிணிக்கப் படுவேனேற்
றன்னிகரி லீசன் றனையெவ்வா றெய்துவன்யா
னின்னலெனு மாழியிடைப் பட்டுலைவேனே"

என்று கூறியிருக்கின்றனர். எனக்கு மனைவியாக வாய்த்திருக்கும் யமனாகிய உங்கள் நாட்டுப் பெண் சுடுகாட்டில் வாழும் கொடிய அலகைகளையும் நல்லவைகளாக்கி விடுகின்றாள். அவளால் நான் அனுபவிக்கும் கஷ்டங்களை யெல்லாம் முன்னனுப்பிய கடிதங்களில் நன்கு விவரித்திருக்கின்றேன்.

":பத்தாவுக் கேற்ற பதிவிரதை யுண்டானா
லெத்தாலுங் கூடியிருக்கலாம்—சற்றேனும்
ஏறுமாறாக நடப்பாளே யாமாயிற்
கூறாமற் சன்னியாசங் கொள்"

என்ற அறிஞர் வாக்கானது "மூடனே! நீ ஏனோ இன்னும் சன்னியாசங் கொள்ளவில்லை" என்று வாதிக்கின்றது. எல்லாந் தெரிந்த தங்களுக்கு நான் அதிகம் எழுதவில்லை. கூடிய சீக்கிரம் நான் தங்களைக் காண்பேன்

யாழ்ப்பாணம்
18—9—78.

இங்ஙனம்
ச. கோபாலகிருஷ்ணன்.

இவ்வாறு கடிதத்தை வாசித்தவளாகிய சிவகாமியானவள் அதைக் கோகிலாம்பாளிடம் கொடுத்து விட்டு அவளுக்கு ஆறுதல் கொடுக்கத்தக்க பல வார்த்தைகளைக்கூறிய பின் மத்தியானப்போசனத்துக்கு நேரமானமையால் அவளிடம் உத்தரவுபெற்றுக்கொண்டு தன் வீட்டுக்குப் போனாள்.

இரண்டாம் அதிகாரம்
முற்றிற்று.

மூன்றும் அதிகாரம்.

சென்னை மாநகரத்திற்குச் சமீபமாயுள்ளது திருவொற்றியூர். இது பற்றற்ற மகா ஞானியாராகிய பட்டினத் தடிகளால் "செய்யுந் திருவொற்றியூருடையீர் திருநீறுமிட்டுக்கையுந்தொழப் பண்ணி யைந்தெழுத் தோதவுங் கற்பியுமே" என்னும் பாடல் விசேடம் பெற்றதும், இன்னும் சமயாசாரியர்களில் ஒருவரும் எம்பிரான்றோழர் என்னும் அருநாமம் பெற்றவருமாகிய சுந்தரமூர்த்தி நாயனார் சங்கிலி நாச்சியாரைக் கடிமணம் செய்தபொழுது இலேச்சினை யாயிருந்த மகிழ மரமானது இன்னுங் காணப்படும் பெருமைவாய்ந்தது. இத்துணை மகிமை வாய்ந்த புண்ணிய தலத்தின் கண்ணே யுள்ள சிவாலயத்தின் முறைக்காரியாகிய தாசியின் பெயர் தேனுமணி. இவளுக்கு இப்பொழுது ஏறக்குறைய முப்பது முப்பத்தைந்து வயதிருக்கும். இவள் இயல்பாகவே அவ்வளவு சிறப்பில்லாதவளாயினும் தனது போலி அலங்காரத்தினுல் கண்டோர் மயங்கும் கட்டழகியாகவே காணப்படுவாள். நிறம் பொது நிறத்திலும் ஒரு மாற்றுக் கூடியதாகவே யிருக்கும். உருண்டைவடிவான முகமுடையவள். மைச்சேர்க்கையால் மிகமனோகரத்தைக் கொடுக்கக்கூடிய கண்களையுடையவள். ஆலிலை போன்ற வயிற்றையுடையவள். பற்கள் இயல்பாகவேமுல்லையரும்பை யொத்தனவல்லவாயினும் அரத்தின் உதவியினுல் முல்லையரும்பையும் வெல்லும்படி செய்திருந்தனள். மூக்கில் தொங்கவிட்டிருக்கும் புல்லாக்கின் தன்னிலைமை எப்பொழுதும் பிரதிபிம்பித்துத் தோன்றும். நெற்றியில் பொட்டில்லாக்காலமே கிடைக்காது. கையில் பட்டணங் காப்பு அணிந்திருந்தாள்.

வாசகனே! நம் கதாநாயகியாகிய வேதவல்லியானவள் தனது நாயகனுல் சவுக்கடிபட்டுத் துக்கப்பட்டுக் கொண்டிருந்த தினத்தன்று இரவு திருவொற்றியூரில் சுமார் பன்னிரண்டு மணி நேரத்தில் மேலே குறிக்கப்பட்ட தாசி தேனுமணியின் வீட்டில்

முற்பக்க மிருக்கும் மேடைமீதுள்ள ஓர் அலங்காரக் கட்டிலின் மீது ஒரு வாலிபன் இருந்து தேனுமணியோடு சரசவார்த்தை யாடி லீலாவிநோதங்களை அனுபவித்த பின்பு கூறுகின்றான்.

வாலிபன்:—புத்தமிர்தத்தினும் தித்திக்கும் தெவிட்டாத இன்பரசக்குயிலே! இப்பொழுது நீ எனக்குக் கொடுத்த சுகத்திற்கு யாது கைம்மாறு செய்யப்போகின்றேன். உடல் பொருளாவி மூன்றையும் உனக்கே ஒப்படைத்து விடுகின்றேன்.

தேனுமணி:—ஆஹா! அதற்கென்ன ஆடவர்களுடைய நிலைமை தெரிந்தது தான்! தங்கள் காரியம் முடியு முன் கண்ணே! மணியே! மானே! உயிரே! தேனே! மயிலே! குயிலே பொன் தருவேன் பூமிதருவேன் என்று எவ்வளவோ பகட்டுரை கூறுவார்கள். தங்கள் கருமம் முடிந்தால் ஏன் நாயே என்று திரும்பியும் பாரார்கள். இவைகளெல்லாம் எங்களுக்குத் தெரிந்த கருமந்தான்.

வாலிபன்:—என்னுருயிரே! நீ என்னை அப்படி நினைக்கவேண்டாம். உன்னுடைய இன்பத்தைப் பெற்றுக் கொள்வதற்கு நான் எவ்வளவு பாடுபட்டேன். எத்தனை பேரைத் தூதனுப்பினேன். எத்தனை பேருக்குத் தாகு கொடுத்தேன். எத்தனை நாள் இந்தரோட்டு வழியாகக் குறுக்கும் நெடுக்குந் திரிந்தேன். இவை இங்ஙனமாகவும் நீ இவ்வாறு கூறுவது நீதியல்ல என்று கூறி அவளுக்கு ஒரு முத்தங் கொடுக்கிறான். அப்பொழுது:—

தேனுமணி:—புன்முறுவல் செய்து அடியாளை மற்றைப் பொதுப்பெண்கள் போல எண்ணவேண்டாம். "காசொன்றே வேசியர்க்குக் கணவனாகும்" என்னும் வாக்கியத்திற்கு மாறாக நான் மரியாதையை விருப்புவேனேயன்றிப் பொருளை எவ்வளவும் பொருட் படுத்தேன். இந்த இடத்தை வேறிடம் போல் எண்ண வேண்டாம். தாங்கள் இங்கு வந்து சிறிது நாளாயினமையால் எனது தன்மை இன்னும் விளங்கவில்லை.

இவ்வாறு தேனுமணி என்னும் தாசியும் அங்கு வந்திருக்கும் வாலிபனும் விநோதமாக வார்த்தைகளாடிச் சந்தோஷமுற்றிருக்கும் பொழுது கீழே வாயிற் கதவைத் தட தட தட பட பட பட வென ஆத்திரத்தோடுதட்டும் சத்தமானது தேனுமணிக்குக் கேட்க, திடுக்கிட்டுத் தன்னோடு பேசிக் கொண்டிருந்த வாலிபனை ஓர்

இடத்தில் மறைத்து வைத்துவிட்டுப் பக்கத்தே தொட்டிலில் நித்திரை செய்த தனது ஆறுமாசக் குழந்தையின் தொடையிற் பலமாகக் கிள்ளிவிட அது வீறிட்டழுதது. இதற்கிடையில் தனது உடையைச் சீர்ப்படுத்திக் குழந்தையை அழாதபடி செய்வதுபோலப் பாசாங்கு செய்து காலகரணம் பண்ணிக் கீழே இறங்கி வந்து கதவைத் திறந்தனள். வந்தவனோ சகித்தற்கரிய கோபங் கொண்டு ஆரவாரித்துச்சீறி! அடியே! உனது குலக்குணம் போகுமா? என்னை இவ்வளவு நேரமாகக் காக்க வைத்து விட்டு நீ யாரோடு பேசிக் கொண்டிருந்தாய்? உள்ளது சொல்; நான் எல்லாம் அறிந்தேன். இங்கு வந்தவன் யாவன்? அவனுடைய பெயரென்ன? சீக்கிரம் சொல்லு; உனது கண்கள் சிவந்திருப்பானேன். கூந்தல் குலைந்திருப்பானேன். பஞ்சணை கலைந்திருப்பானேன்? அந்தப் படுவாப் பயலைப் பார்க்க வேண்டும். சீக்கிரம் அவனை இங்கே கொண்டுவா. நான் இலகுவில் விடமாட்டேன் என்று கூறி ஓர் இடத்தில் இருக்காதபடி அங்கும் இங்கும் உலாவுகின்றான். அப்பொழுது தேனுமணியானவள் கண்ணீர் சொரிய விம்மி விம்மி அழுது கொண்டு கெட்டி கெட்டி! எனது குலக்குணம் போகாது தான். அந்தோ! ஒற்றியூருடையானே! நான் தாசியாகப் பிறந்தும் இந்த மனிதன் மீது கொண்ட இடையறாப் பேரன்பினால் சம்பாதிக்க வேண்டிய சம்பாத்தியத்தை இழந்து இவரே சதமெனக் காத்துக் கிடந்ததற்குப் பலன் இது தானா கிடைக்க வேண்டும். தன்னிடம் திருட்டுப் புத்தி இருப்பது போலவே என்னிடமும் இருப்பதாக எண்ணிக் கொண்டாரோ; அல்லது இவரது ஆசை நேசக்கண்ணாட்டி வேதவல்லியின் போதனையோ நான் ஒன்றும் அறியேன். என்ன அநியாயம்! கண்கள் சிவந்திருக்கின்றதாம்! இப்பாதக மனிதன் மீது கொண்ட விசுவாசத்தினால் இவ்வர்த்தயாமம் வரை நித்திரை செய்யாது கண் விழித்திருந்தேன். நான் என்ன மாடா மிருகமா! தேகம் அலுப்பாயிருந்தது. சிரமந்தீரச் சற்றுநேரம் இப்பஞ்சணை மீது அப்புறம் இப்புறம் அசைந்து படுத்தேன். ஆரோ எவளோ தெரியாது. பண ஆசை பிடித்த வேசிகளோடு சல்லாபமாக விருந்துவிட்டு இங்கு வந்து கண் சிவந்திருக்கிறதென்றும் கூந்தல் அவிழ்ந்திருக்கிறதென்றும் பஞ்சணை குழம்பியிருக்கிறதென்றும் பாசாங்குபண்ணி என்னை ஏமாற்றப்பார்க்கின்றார்; ஐயா! கடைசிவார்த்தை கூறுகின்றேன். இனி

மேல் உமக்கு இங்கே இசையாது. நானும் உம்மிடம்பெற்றுக்கொள்ள வேண்டிய அனுபவம் இவ்வளவுதான்போலும். தயவுசெய்து வெளியே போய்விட வேண்டும். நான் இன்று இத்தேகத்தை விட்டு விடப் போகின்றேன். விட்ட குறை தொட்டகுறை இருந்தால் மறுஜென்மத்திற் பார்ப்போம் என்று கூறிப் பெருஞ் சத்தமிட்டு அழுதனள். அங்குவந்திருந்த புருஷசிகாமணிக்கு இவைகளையெல்லாம்கேட்கவே கோபமானது வேகமாகப் பறந்தோடிவிட்டது. அதற் குதவியாகச் சோகமானது முன்னின்றது. அவன் அவளைப்பார்த்துக்கண்மணியே! அற்புதப்பாவாய்! வானுடர் போற்றும் தேனுமணியே! நான் முன்கோபி யென்பது தெரியாதா! நான் மாறுபாடாக விளங்கிக் கொண்ட அறியாமையினுல் சிறிது அவதூருகப் பேசிவிட்டேன். நீ அவைகளை மன்னித்துக் கொள்ளவேண்டும். நீ மாத்திரந் தானு என்னில் விசுவாசங் கொண்டாய். நான் அதற்கு எத்தனையோ மடங்கு விசுவாசங் கொண்டிருக்கிறேன். பார் அதற்கு அத்தாட்சியாக எனது தாய்மாமனும் ஹைக்கோர்ட்டு வக்கீலுமாயிருந்த சீமானுடைய மகளைக் கடிமணஞ் செய்திருந்தும் அவளோடு பாலுந் தேனும் போல விருந்த நான் உன்னுடைய நேசம் பெற்ற பின்னர் அவளைக் கடைக்கண்ணாலும் திரும்பிப் பார்த்ததில்லை- இதுவே போதியசான்ருகும் என்று பலவிதமான ஆசை வார்த்தைகள் கூறி அவளுக்குச் சமீபத்திற் சென்று முத்தமிட்டு அவள் கொண்ட கோபத்தைமாற்றி அவளோடசந்தோஷமாகச் சயனித்திருந்தனன். மறைந்திருந்த வாலிபன் தப்பினேன் என்று ஓட்டம் பிடித்தான்.

வாசகர்களே!

அநேக ஜனனங்களிற் செய்து கொண்ட புண்ணிய விசிட்டத்தினுல் பெறுதற்கரிய மானுட ஜனனத்தை ஒருவன் எடுத்ததினுல் அடையும் பிரயோசனம் புண்ணிய மிது பாவ மிது என்று அறிதற் கேதுவாகிய பல பலநூல்களைக் கற்றுப் பிரமசரியம், கிருகஸ்தம், வானப்பிரஸ்தம், சந்நியாசம் என்னும் நான்காச்சிரம வழியொழுகி அவைகளினுல் விசேடம் பெற்று பரமேசுவர மூர்த்தியுடைய பாதார விந்தத்தில் இரண்டறக் கலந்து மோக்ஷ சாம்பிராச்சியத்தை யடைதலே. இவைகளில் பிரம சரியம் வானப்பிரஸ்தம் சந்நியாச மென்ற மூன்றினும் பார்க்கக் கிருகஸ்தாச்சிரமமே விசேஷமானதென அறிஞர் கூறுவர். "இல்லறமல்லது நல்லறமன்று"

என்றார் ஔவையார். "இல்வாழ்வானென்பா னியல்புடைய மூவர்க்கு, நல்லாற்றினின்றதுணை" என்றார் தெய்வப் புலமைத் திருவள்ளுவ நாயனார். இல்லற வாழ்வின் பெருமை இவ்வளவு வென்று சொல்லுந் தரத்ததோ. ஒருவன் பிரமசரிய விரதத்தை அனுட்டித்துப் பின் கூறிய காலத்திலே அவ்விரதத்தை நிறுவி, தன்னுடைய வம்சத்திலே ஓர் பெண்ணை, பெற்றோர் அனுமதியோடு மணந்து "தென் புலத்தார் தெய்வம் விருந்தொக்கலென்றாங் கைம்புலத்தாறோம் பறலே" என்றபடி,

இவ்வைந்து கடன்களையும் செய்தலே விசேஷமாகும், மனைவியோ ஈசுவரசங்கற்பத்தினால் அமையப் பெற்ற நாயகன் குருடனாயினும் முடவனாயினும் குரூபியாயினும் தீரா நோயாளனாயினும் அவனைத் தான் வழிபடு கடவுளாக நினைந்துப் போற்றித் துதித்தல் வேண்டும். இந்து தேசத்தில் முன் இருந்த ஓர் அரசகுலப் பெண்மணி சத்துருக்களெல்லாம் அடிவணங்கித் தெண்டனிட்டுப் போற்றித் துதிக்கும் வலிமையும் கீர்த்தியும் வாய்ந்த இராஜாதி ராஜனின் புத்திரியாயிருந்தும் "கை நிறைந்த பொருளினும் கண்ணிறைந்த கணவனே விசேஷம் என்னும்" முதுமை வாக்கியத்திற்கு மாறாகப் பிதாவினால் தனது அனுமதியோடு நிச்சயிக்கப்பட்ட நாயகன் குருடன் எனப் பின்னரறிந்தும் தனது பதிவிரதா தர்மத்திற்குப் பங்கம் வாராதவண்ணம் நியமிக்கப்பட்ட குருநாட்டு நாயகனை மணந்து மற்றைய பெண்கள் தன்னைப் பின் பற்றி நடக்கும் முன் மாதிரி காட்டியிருக்கின்றனள். இவ்வாறாகிய விசேடம் அமைந்திருந்த பெண் மகளது நாமங்களையும் சரித்திர விசேடங்களையும் எமது புன்னாவினாற் சொல்ல முடியா! முடியா!! இவைகள் இங்ஙனமாக இக்காலத்திலே சில ஆடவர்கள். "நீதியகன் மூடற்கருந்ததி யெனத்தக்க நெறி மாதரைத் தந்தனை" என்னும்ஆன்றோர் வாக்கியமாறாகாதபடி தங்கள் ஆயுள் பரியந்தம் இல்லற வாழ்வை நடத்துதற் கென்று கனலிசான்றாகக் கைப் பிடித்த காதல் மனைவியர் கண்ணீர் சிந்திக் கதறியழ,

"உயிர்க் கூடு வீடு மளவும் உமைக் கூடி
மருவு தொழில் ஒருக்காலு நிகழ்வதிலே மெனவே சூள்
உரைத்தே முன் மருவினரை வெறுத்தேமெ

திரவியம துடைத்தாய்ப் பின் வருகுமவ
ரெதிரே போய்
பயிற்பேசி யிரவு பக லவர்க்கான பழமைபல
படப் பேசி யுறு பொருள் கொள்

விலை மாதரையே சதமென நம்பி அவர்கள் பாத சேவை செய்து முன்னோர்கள் தேடிய பொருள்களை யெல்லாம் பாழுக்கிறைத்துப் பரதேசிகளாகி முன் தம்மை ஏற்றிப் போற்றிய கணிகை மாதர்களால் பின் அடித்துத் துரத்தப்பட்டு அலைந்து: அவதியுறுகின்றனர். இவர்களின் மனைவியரிற் சிலர் தம்மை மணந்த நாயகர்களால் சகித்தற்கரிய கஷ்டங்களை அனுபவித்தும் நமது தலைவிதி இது வாகுமென்றெண்ணி மரண பரியந்தம் தங்கள் கற்பைக் காப்பாற்றிக் கொள்ளுகின்றனர். வேறு சிலர் இவைகளுக்கு முற்றும் மாறாக நடந்து கற்பா பரணத்தைக் கை நழுவ விட்டு நரகத்துக் காளாகின்றனர்.

இனி "நிதான முளவுத்தமற் கிங்கிதமிலாத கொடு நீலியைச் சேர்வித்தனே" என்றபடி சில ஆடவர்கள் செய்து கொண்ட கன்மத்திற்கு இசையக் கொடிய மனைவியரின் இடியேறு கேட்டு அவர்களை அடக்கி ஆண்டு கொள்வதற்கு ஏற்ற வலிமையிருந்தும் அவைகளை விளங்கி நடக்தற்கான கல்வி யறிவில்லாமையினால் துடியாப் பெண்டிரொடு குடித்தனம் நடத்த முடியாமல் தாசிகள் வீட்டை நாடிச் சென்று அவர்கள் வீடே சதமெனக்கிடந்து அலைந்து கெட்டுப் போகின்றனர். "முடித்தெங்கு நிற்கும் பூமிப்பால மணந்த நாயர்களோடு இல்லறம் நடத்தக் கொடுத்து வைக்காத இப்பாதகப்பெண்ணுக்கு எவ்விதப் புத்தி மதிகளைக் கூறினும் சரிதான். இவ்வழிகளைப் பின் பற்றிக் கெட்டழிந்து போன பெண்களது சரித்திரங்களைக் கூறினாலும் சரி தான்; இவர்கள் கேட்கவே மாட்டார்கள். இது பற்றி யன்றோ ஓர் அறிஞர்,

"கற்பூரப் பாத்தி கட்டிக் கத்தூரி
யெருப்போட்டுக் கமழ் நீர்பாய்ச்சிப்
பொற்பூர வுள்ளிதனை விதைத்தாலு
மதன் குணத்தைப் பொருந்தக் காட்டுஞ்

சொற்பேதை யருக்கறிவிங் கினிதாக
வருமெனவே சொல்லினலு
நற்போதம் வாராதாங் கவர் குணமே
மேலாக நடக்குந் தானே"

என்று கூறி யிருக்கின்றனர்.

பொதுப் பெண்களாகிய கணிகை மாதர்கள் எத்தனையோ குடும்பத்தைக் கெடுத்து விட்டார்கள். எத்தனை இளைஞர்களை நோயாளர்க ளாக்கிக் கெடுத்து விடுகின்றார்கள். இவர்களுக்குத் தகப்பன் வந்தாலும் சரிதான்; மகன் வந்தாலுஞ் சரிதான்; முறை யில்லையென்று விட்டு விடமாட்டார்கள்.

ஒரு தாசி வீட்டிற் சென்றிருந்த ஒருவாலிபனை அவள் பணங் கொடு என்றபோது, அதற்கு அவன் எனது பிதா இறந்தபின் சகலமும் உனக்கே கொடுத்து விடுகிறேன் என்று கூற, அதுகேட்ட பரத்தை அவன் நித்திரையா யிருக்கும் பொழுது ஒரு கல்லை யெடுத்து மண்டை பிளந்து போகும்படி அடித்துக் கொன்று விட்டு ஓடித்தப்பி விடு என்று போதிக்கும் போது அவனின் பிதா வாகிய கிழவனும் அக்காதகக் கணிகையோடு சம்பந்த முள்ளானு தலின் அவ்விடத்து வந்து இந்தக் கணிகை தன் மகனுக்குக் கூறிய வைகளைக் கேட்டுத் தப்பினேன் தப்பினேனெனக் கூறி ஓட்டம் பிடி த்தான் என்பது சரித்திரம். இதை ஒரு அறிஞர்,

"தையலிலம்புகும் போதென் சுதன் குரலைக்
கேட்டொதுங்குத் தாழ்வாரத்தில்
பைய வொன்றிச் செவி கொடுத்தேன்
பாலனைப்பார்த் தக்கோதை பணமீ யென்றாள்
ஐயனிறந்திடிலெல் லாநும தென்று
னவன் றூங்கு மமையம் பார்த்துச்
சைய மெடுத்தவன் றலையிற் போடுவாய்
போடு முன் நான்றூனு மழுவே னென்றாள்"

என்று கூறியிருக்கின்றனர். ஆகையினால் இதை வாசிக்கும் எமது சகோதர சகோதரிகள் யாவரும் இதன் வழி யொழுகிச் சன்மா ர்க்கத்தை யடைதல் வேண்டு மென்பதே எமது வேண்டு கோள். இதைப் பற்றி யெழுதினல் விரியுமென்றஞ்சி விடுத்துக் கதையைத் தொடர்வோம்.

தாசி தேனுமணி வீட்டில் ஒரு ஆடவன் வந்து அவளோடு சீறிக் கோபித்துப் பின் சாந்தமாயினன் என்று கூறினேமல்லவா, அவன்றான் ஒப்புயர் வில்லா உத்தமக் கற்பரசியாகிய வேதவல்லி யின் நாயகன். இவன் பெயர் மாசிலாமணி முதலியாராகும். இவன் றான் ஹைக்கோர்ட்டு முதல் நீதிபதியாயிருந்து காலஞ்சென்று போன மாணிக்கவாசக முதலியார் பி. ஏ. பி. எல். அவர்களின் அருந்தவத்துதித்த புத்திர சிகாமணி இவனின் பிதா. இவன்சிறு வயதாயிருக்கும் போது பெருந் தொகையான பொருள்களை வைத்துக் காலஞ் சென்று விட்டனர். இவன் தன் தாயார் சிவகாமியினால் செல்வமாக வளர்க்கப்பட்டான். அதனால் துஷ்டர்களுடைய சகவாச முடையனாய்த் தன்னுடைய கௌரவத்தை விடுத்துத் தாசி தேனு மணியுடைய மாயவலைக்குட் சிக்கி விட்டனன்.

நான்காவது அதிகாரம்.

நந்தொலி வாவிகள் நயந்திடு விந்தையும் சந்திரன் தவழு றும் விந்தைச் சோலையும் பந்த மறுக்கும் நந்திவாகனனின் சுந்தரா லயங்களும் நிறைந்து நல்லறிவாளர் நயந்து நனியோங்கு யாழ்ப் பாண நாட்டின் தலை நகரமாகியதும் அருணகிரி நாதரால் "திருப் புகழ்" பாடல் பெற்றதும் ஆகிய நல்லையம்பதியின் இராச வீதி யின் கண்ணே ஓர் நாட் பிற்பகல், சாந்தமே யோருருவமான காந் தாமணி யொருத்தி மூன்று வயசுப் பிராயமான தனது இளங் குழ வியையும் அழைத்துக் கொண்டு, ஓர் காலத்தும் வீட்டை விட்டு வெளியே வாராதவளாதலின் வெட்கம் பின் இழுக்கத் துக்கம் பின் னிழுக்க,

"பாரவிள நீர் சுமக்கப் பண்டே பொறுத விடை
யாரவடந் தான்சுமக்க வாற்றுமோ—நேரே
புடைக்கனத்த கொங்கையின் மேற் பூங்களபஞ் சாத்தி
யிடைக் கனத்தஞ் செய்தவ ராரின்று"

என, அன்று வென்றிய கீர்த்தி நின்று பிரகாசிக்கும்படி பலபாவி யற்றிய பாவலராகிய நாவல ரொருவர் கூறினாற் போல உண்டோ இல்லையோ வென்று ஐயுறும் படியான இடையானது வாரிட்டு நேரிட்ட கொங்கைச் சுமையைத் தாங்கமாட்டாமல் தள்ளாடிச் சங்கடப் பட்டுச் சிறிது தூரம் சென்று ஓர் சந்தின் வழியாகத் திரும்பி பக்கத்திலேயுள்ள வீட்டினுட் புகுந்து சுமார் ஐம்பது வயசுப் பிராயமும் பருத்த தொந்தியும் கருணாரசம் நிரம்பிய முகமுமுடையவருமான ஞான சேகரம் பிள்ளை யென்பவருடைய காலடியில் வீழ்ந்து கதறியழுதனள். அப்பொழுது அவர் திடுக்கிட்டுக் குழந்தாய்! ஞானப் பூங்கோதாய்! இனிமேலாவது உனக்குப் புத்தி வரும் என்று நினைக்கின்றேன் வீட்டு முற்றம் தெரியாத நீ இப்பஞ்சைக் கோலங் கொண்டு வரக் காரண மென்ன? அந்தோ! நீ உனது தந்தையாருக்கு ஏக புத்திரியாகப் பிறந்து செல்வமாகவளர்க்கப்பட்டதும் பின் உனது தந்தையார் புரசபாக்கத்தில் நடந்த அக்கினிவிபத்தில் இறந்து போன பிற்பாடு உனது தாயார் சிறிய தகப்பனாகிய நான் ஒருவன் இருக்கின்றேனே யென்று என்னை அற்பமேனும் பொருட்படுத்தாது தன்னுடைய எண்ணப்படி உனக்கு விவாகம் முடித்து வைத்தனள். அவள் இருந்து இக்காட்சிகளைக் காணாதபடி இறந்துவிட்டதைப் பற்றித் துக்கிக்கின்றேன். குழந்தாய்! உனக்கு ஈசனாற் கொடுக்கப்பட்ட வாழ்வு இவ்வளவு தான் போலும்! இனிமேலாவது புத்தியாயிரு; என்னுடைய பொருள்களெல்லாம் யாருக்கு? நானோ முன் செய்த கன்ம வசத்தினால் ஒரு குழந்தையாவது இல்லாமல் மலடனாகவே யிருக்கின்றேன் என்று அவளுக்குப் பல புத்திமதிகளைக் கூறி அவள் வீட்டை விட்டு வெளியேறிய காரணத்தையும் வினாவினார். அப்பொழுது ஞானப் பூங்கோதை என்னும் பெண்மணியானவள் கூறுகின்றாள்.

சிறிய பிதாவே! சகல சங்கதிகளும் தங்களுக்குத் தெரிந்தது தானே எனது நாயகர் நேற்றைத் தினம் சென்னைக்குப் பிரயாணமாயினர். காதகியாகிய எனது நாத்தி கமலாம்பாள் நாயகர் இல்லாத அச்சமயம் பார்த்து வேண்டு மென்று தனது வஸ்திரத்தை நெருப்பிற் கொளுத்தி யெரித்து விட்டு நானே அப்படிச் செய்தேனென்று பலபேரறியத் தூற்றி எனது கூந்தலிற் பிடித்து அடித்து உதைத்து இழுத்துக் கொண்டு வெளியே தள்ளிக் கபாடபந்தனம்

செய்து உள்ளே சென்றனள். எனது நாயகன் இல்லாத அமையத்து வெளியே வருவது சரியல்லவென்று எண்ணி உள்ளே செல்வதற்கு எத்தனித்தேன். காதகியாகிய எனது நாத்தி பிரமராட்சஸிபோலச் சீறிக் கோபித்துக் கொண்டு வந்து மீட்டும் கூந்தலிற் பிடித்து மார்பில் இடித்து வெட்கமற்றவளே; எனது கலியாண வீட்டில் எடுத்த கூறைப் புடைவையை நெருப்பிற் போட்டெரித்து விட்டு மாய்மாலம் பண்ணுகிறாயோ? கெட்டி! கெட்டி!! இனி இவ்வீட்டிற்குள் ஓர் அடியும் எடுத்துவைக்கவிடமாட்டேன். அத்துமீறி வருவாயாகில் இக்கல்லால் அடித்துக் கொன்றுவிட்டு மயக்க வந்து விழுந்து இறந்துபோனாளென்று பகிரங்கப் படுத்தி விடுவேன். அதற்கு எள்ளளவும் பயப்படமாட்டேன் என்று கூறி நெருங்கினாள். இனி உள்ளே போவது நீதியல்லவென்று துணிந்து புறப்பட்டு இங்கு வந்துவிட்டேன். ஆனால் நான் அனுபவிக்கவேண்டிய கஷ்டத்தை அனுபவிக்கின்றேன். எனது நாதர் என்ன செய்குவார். அவர் என் மீது வெறுப்புள்ளவருமன்று. இச்சம்பவங்களெல்லாம் அவருக்குத் தெரியாது என்றனள். இவைகளைக் கேட்டஞானசேகரம் பிள்ளை மனவருத்தமுற்று என்குலமணி விளக்கே! நீ இங்கே ஒரு குறைவுமின்றி இரு. உனது நாயகன் இங்கு வந்த பின் எல்லா வற்றிற்கும் ஒழுங்கு பண்ணிக் கொள்கிறேன் என்றனர்.

ஞானப்பூங்கோதையானவள்சிறியதந்தையார் வீட்டில்சென்ற அன்றிரவு மிகுந்த மனவருத்த முடையவளாய் நித்திரை யின்றிச் சயனித்திருந்தனள். அப்பொழுது இந்த வீட்டுக்கு நேரே யுள்ள மெத்தை வீட்டில் ஒரு ஆடவனுக்கும் அவன் மனைவிக்கும் குடும்ப விஷயமாகப் பின்னாற் காணப்படும் வார்த்தைகள் நிகழுகின்றன.

பெண்:—அந்தோ! இஃதென்னை பேரிழவாக விருக்கின்றது. போகிறேன் போகிறேனென்று தான் எப்பொழுதும்சொல்லுகிறீர். போய்த் தொலைகிறது தானே. இங்கே யாரும் காலுக்கு விலங்கிட்டு வைத்திருக்கிறார்கள் போலிருக்கின்றது. குசலாய்ப் போகலாம்.

ஆடவன்:—நல்ல நாயகமே! இந்தப் பைத்தியம் பிடித்த பிசாசைக் கட்டி எத்தனை நாளைக்குத் தான் அழுகின்றது. அடியே! ஊரில் இருந்து கடிதம் வந்தால் உனக் கென்ன? இன்று தபாற்காரன்

கடிதங் கொண்டு வந்து தந்துவிட்டுப் போன நேரந் தொடக்கமாக என் மீது சீறிவிழுகின்றாயே? கடிதத்தைநான்மறைத்துவைத்திருக்க வில்லை. இதோ வாசித்துப்பார்.

பெண்:—ஆமா நான் எழுத்து வாசனை அறியாத அசடாகையினால் இதுவும் சொல்லுவீர், இதற்கு மேலும் சொல்லுவீர், என்றாள் அப்பொழுது.

ஆடவன்:—குடனீர் இழுத்து வெளியே காட்டினாலும் வாழைநார் என்று சொல்லுகிற உனக்கு நான் என்ன செய்யட்டும். இன்னும் சொல்லுகிறேன் கேள். இக்கடிதம் சென்னையிலிருந்து எனது தாயார் அனுப்பியது. வேண்டுமாயின் அடுத்த வீட்டுச் சிவக்கொழுந்து விடம் காட்டி அறிந்து கொள்.

பெண்:—கேடுகெட்ட உமக்கு நான் எத்தனையோ முறை அந்தப்படவாச் சிறுக்கியுடைய பெயரைக் கூறவேண்டா மென்று சொல்லியும் வெட்கம் ரோசம் மானமற்று சீச்சீ! மீண்டும் கூறுகின்றீர்! அவள் உமக்குக் களவாகத்தரும் சுகம் இப்படி யெல்லாம் சொல்லச் சொல்லுகின்றது. உம்மேற் குற்றமில்லை. இனிமேல் அவள் இவ்வீட்டு வாயலிற்கால் வைக்கட்டும் சொல்லுகிறேன் மறுமொழி.

ஆடவன்:—சிவ! சிவ!! அடியே காதகி! நீ நாசமாய்ப் போக! உன் நாவிற் புழுநெளிய! அடாதவார்த்தை கூறுகிறாயே? ஒப்புயர் வில்லா உத்தமபத்தினியாகிய அவள் மீது வீண் அபவாத வார்த்தை கூறி நரகத்துக் காளாகின்றாய், என்மனம் எரிய நடக்காதே. அந்தோ! என் ஆயுள்பரியந்தம் இப்பிசாசைக் கட்டி அழும்படி சென்ற ஜெனனத்தில் யாதுபழியைச் செய்தேனோஎம்பெருமானே! இக்காதகியினுடைய சிறையினின்றும் எக்காலத்து மீட்டு விடுவீரோ என்று தலையிலடித்துக் கண்ணீர் சிந்தினன்.

பெண்:—காளசர்ப்பம் போற் சீறிக்கோபித்து, ஏதுகாரியம் கெட்டுப் போயிற்று! காதகியாம்! நாசமாய்ப் போவேணும்! வாயிற் புழுநெளியுமாம் எனது வீட்டிலிருந்து இப்படி எல்லாம் துணிந்து கூறும் அதிகாரம் தந்தது யாரோ? இனிமேலாவது மரியாதையாக விருக்கவேண்டு மென்னும் எண்ணம் இருந்தால் வாயை மூடிக் கொண்டு தரும் சோற்றைச் சாப்பிட்டுக் கொண்டிரும், என்று கூறிக் கீழேகிடந்த கடிதத்தைக் கிழித்து அவனுடைய முகத்தில் எறிந்தாள்.

ஆட்வன் தாங்குதற்கரிய கோபங்கொண்டானாயினும் பெரியாரைத் துணைக்கொண்டொழுகிய பேரறிவாண்மையினால் அதை அடக்கிக் கொண்டு அன்றிரவு முழுவதும் நித்திரையின்றிச் சிந்தாகுலமுடையவனாயிருந்து உஷக்காலத்தில்எழுந்து உற்றார் உறவினர்நடப்பினர் ஆகிய ஒருவருக்கும் ஒன்றுங்கூறாது வழிச் செலவுக்குச்சிறிது பணம் எடுத்துக் கொணடு நல்லைநாயகர் சந்நிதியடைந்து அவருடைய பாததாமரைகளைத தியானித்துச் சிறிது நேரம் மௌனமாக நின்றனன். அப்பொழுது கோயிற்கதவு திடீரெனத் திறக்கப்பட அக்கோயில் அருச்சகராகிய சாம்பசிவக் குருக்கள் குன்றமெறிந்த குமரநாயகருக்குத் தீபாராதனை செய்தனர். அடியவர்கள் ஆராமையோடும் இறைவனடியை உள்ளன் போடு துதித்து நிற்கின்றனர். நாம் இதுகாறும் ஆடவன என்றும் கூறிய கோபால கிருஷ்ணனும் ஆராமையோடும் துதிக்கின்றனர்.

சுத்தபர சிவஞதி சத்தியொ டபின்னமாய்த்தோற்றநிலையிறுதியிலதாய்த்
துய்யசுரு துச்சிரப் பிரணவசொரூபமாய்த் தோமிலானந்தமயமாய்ப்
பெத்தமல பசுவகையி னைத்துவிதரூபமாய்ப் பேச்சிறந் தறியு மறிவாய்ப்
பிருதுவியைமுதல் நாதபரியந்த வடிவதாய்ப்பேசிடவு நின்றபொருளோய்
பத்தர்கள்பணிந்துசித மெய்த்துதிகள் செய்திடப் பங்கயன்மால்வணங்கப்
பார்புகழு மாடமலி நல்லூரெனும்பதி பரிந்திடங்கொண்ட குகனே
புத்தமிர்தபோகமே சத்வகுணமேகமே பொய்யனேன் பவநீங்கியுன்
பொன்னடிப்பெருவாழ்வு துன்னவெற்கருளுவாய் பூரணானந்தமுதலே

அஞ்சுமுகந் தோன்றி லாறு முகந்தோன்று
வெஞ்சமரந் தோன்றில் வேறோன்று—நெஞ்சி
லொருகானினைக் கிலிருகாலுந் தோன்றும்
முருகாவென் றோதுவார் முன்

இவ்வாறு தோத்திரம் செய்து அவ்விடத்தை விட்டு நீங்கிக் காங்கேசன் துறையை அடைந்து வங்கமேறி ஐந்தா நாள் சென்னையை அடைந்து நடந்த சம்பவங்களை யெல்லாம் தாயாராகிய கோகிலாம்பாளுக்குக்கூறி, அங்கு வசிக்கும் பொழுது அக்காலத்தில் நடைபெற்று வந்த "மாதர்கலாநிதி" என்னும் வாரப்பத்திரிகைக்கு ஆசிரியராக நியமிக்கப்பட்டுப் பத்திரிகையைக் கிரமமாக நடத்திவந்தான்.

ஐந்தாம் அதிகாரம்.

நல்லூரிலே கோபால கிருஷ்ணனும் மனைவியாகிய நாகரத்தினம் என்பவளும் குடும்ப விஷயமாகச் சம்பாஷித்தவைகளையெல்லாம் கேட்டுக் கொண்டிருந்த ஞானப் பூங்கோதை என்னும் பெண்மணியானவள் ஆச்சரிய முடையவளாய் அந்தோ! இஃதென்னை கலிகாலக் கொடுமையாக விருக்கின்றது. இவள் வழிபடு தெய்வமாகப் போற்றித் துதிக்கவேண்டிய நாயகனை அற்பமேனும் மரியாதை இல்லாமல் தூஷிக்கின்றாளே. என்னை இந்த நிலைமைக்குக் கொண்டுவந்த நாத்தி கமலாம்பாளையும் நல்லவளாக்கி விட்டாளே. என்று துக்கப்பட்டுக் கொண்டிருக்கும் பொழுது நித்திராதேவி அவளைத் தன் வசமாக்கிக் கொண்டாள். சிறிது நேரஞ் சென்றபின் இப்பெண்மணியானவள் தன்னுடைய நாயகன் சென்னைமாநகரிலுள்ள ஓர் மேல்மெத்தையினின்றும் தவறிக் கீழேவிழுந்து இறந்து விட்டதாகச் சொப்பனங்கண்டு அலறி யெழுந்து திடுக்கிட்டு அழுது புலம்பித் தேக நடுக்கமும் ஒரு விதமான சோர்வும் உடையளாய்ச் சங்கடப்படும் பொழுது சிறிய பிதாவாகிய ஞானசேகரம் பிள்ளையும் துயில் நீங்கிச் சங்கதியுணர்ந்து, அம்மா கனவிற்காசு செலவுக்குதவுமா? நினைவினுலுண்டாகிய மனநிகழ்ச்சியின் சுகதுக்க சம்பவங்களுக்குப்பிரயோசனத்தை நிரூபித்துச் சங்கடப்படலாகாது. அமரர் இடர்தீர்த்த அறுமுகப் பெருமானுரின் அருள் நோக்கத்தினல் எங்களுக்கு ஒரு இடையூறும் வரமாட்டாது. நாங்கள் அவருக்கு வழி வழி அடிமைகளல்லவா? அவர் எங்கள் குலதெய்வமல்லவா? நீ ஒன்றும் யோசிக்காதே என்று ஆறுதல் வார்த்தை கூறி விபூதியை எடுத்துச் சிறிது நேரம் தியானஞ் செய்து அதை அணிந்து அவளுக்கும் அணியக் கொடுத்தனர். இது நிற்க.

சென்னைமாநகரில் நம்கதாநாயகியாகிய வேதவல்லியின் நாயகனை மாசிலாமணிமுதலியார் தாசி தேனுமணி யென்பவளது ஆசை வாரிதியில் மூழ்கிக் கரையேற முடியாதவனுப்த்தன்னிட மிருக்கும்

பொருள் பண்டங்களையெல்லாம் கொடுத்துக்கொண்டே வருகின்றான், அவளும் "காற்றுள்ளபோதே தூற்றிக் கொள்ளவேண்டும்" என்றபடி ரவிக்கைக் கென்றும் பாவாடைக் கென்றும் தாவணிக் கென்றும் ஒவ்வோர்காரணங்காட்டிப் பொருள்பறித்துக்கொண்டே வருகின்றாள். அநியாயமாகப் பொருள்கள் நாசமாய்ப் போவது அவனுடைய தாய் சிவகாமிக்குத் தெரியாமல் இருக்கவில்லை. பொருள் எவ்விதம் அழிந்துபோனாலும் தனது நாட்டுப் பெண்ணாகிய வேதவல்லி சவுக்கடி பட்டாற்போதும் என்னும் எண்ணம் உடையவளாய் இருந்தாள்.

சிறிது காலத்துக்குள் மாசிலாமணி முதலியார் என்றவன் தன்னிடம் உள்ளபொருள்களெல்லாவற்றையும் இழந்துமீண்டும்பொருளுக்கு வழியில்லாமையினால் அருமையான பங்களாக்களையும் தோட்டங்களையும்அடைமானம் வைத்துவிற்றும் அருமைநாயகியின் நகைகளெல்லாவற்றையும் விற்றும்செலவுசெய்து மீண்டும் பொருள் வேண்டுமே யாது செய்வோமென்று கவலை கொண்டிருந்தான். பிரபுவீட்டுப்பிள்ளைதானே நம்முடைய பணத்திற்குப் பயமில்லை என்று கொடுத்த கடன்காரரெல்லாம் இவனின் மோசநிலைமையை யுணர்ந்து தங்கள் பணத்தைக் கொடுக்கும்படி நெருக்குகின்றார்கள். இவனும் அங்கே பணம் வருகின்றது இங்கே பணம் வருகின்றது என்று தவணை சொல்லிக்கொண்டே வருகின்றான். தாசி தேனாமணியோ ஆசைநாயகனின் நிலைமை முழுவதையும் அறிந்துவிட்டாள். அறிந்தும் அறியாள்போலப்பாவனைபண்ணி இவனைவெளியே துரத்திவிட யோசித்துக் கொண்டிருக்கின்றாள்.

இப்படி நிகழும் நாட்களில் ஒருநாட்சாயங்காலம் மாசிலாமணி முதலியார் தனது ஆசைநேசக் கண்ணாட்டியாகிய தேனாமணி வீட்டிற்குவந்து அவளை அழைத்தனன். பதிலில்லை. சிறிது நேரஞ்சென்றபின் அவளின் வேலைக்காரிவந்து "ஐயா! தாங்கள் இவ்வீட்டிற்குள் ஒருகாலத்தும் வரக்கூடாதாம். நீங்கள் மரியாதையோடு போய்விடுங்கள்" என்று கூறி உள்ளே போயினள். அவன் இடியேறுண்ட அரவம்போல் நடுங்கி மௌனமாக விருந்தனன். இவன் போய்விட்டனனெனத் தேனாமணி எண்ணி வெளியேவந்தவள் இவன்இருந்ததைக் கண்டுவிரைவாக உள்ளேபோய் வேலைக்காரியைக்கோபித்து அடியே

இந்தநாய் இங்கு ஏன் நிற்கிறது! நீ ஏன் இன்னும்பிடித்துவெளியே தள்ளவில்லை; என்னன்பர் ஒருவர் வரும் நேரமாயிற்றல்லவா? என்று கூறுவதற்குள் அவளுடைய ஆசைநாயகர்களுள் ஒருவனுய் இவ்விடம் இருந்தஒருவன் இவனின்பிடரியிற் கைகொடுத்துத்தள்ளி வெளியே கொண்டுவந்துவிட்டுக் கவாடபந்தனஞ்செய்து உள்ளே போயினன். அப்பொழுது வெளியே கடன் விருந்துடனே நின்ற அரசாங்கச் சேவகன் இவனுக்கு விருந்தைக்காட்டிச் செயிலுக்கு வரும்படி அழைத்துக் கொண்டுபோய்ச் சிறையில் அடைத்து விட்டனன்.

ஐந்தாவது அதிகாரம்.

முற்றிற்று.

ஆறும் அதிகாரம்.

வேதவல்லியானவள் தன்னுடைய நாயகன் கடன்விருந்தென அழைக்கப்படும் அரசனுணையானது பீடிப்பச் சிறைச்சாலையில் அடைக்கப்பட்டான் என்பதைக் கேள்வியுற்று, வெய்யிலில் அகப்பட்ட புழுப்போற்றுடித்து, அன்று பகல் முழுவதும் அழுது புலம்பி உணவு கொள்ளாது துக்கத்தோடிருந்தனள். அத்தை சிவகாமியின் வசைமொழிகளும் வழக்கம்போற் பிரயோகிக்கப்பட்டன. அந்தோ ! கருணாநிதியே ! பாவியாகிய நான் புகுந்த இடம் பிறந்த இடம் ஆகிய இரு இடமும் கீர்த்தி உள்ள இடமாய் யாதொரு குறைவுமின்றிவாழ்ந்து இப்பொழுது கெட்டழிந்ததை நினைந்தழுவனே, எனது பிதாவோ டுடன்பிறந்த சகோதரியே மாமியாராக அமையப்பெற்றும் அவளேஎனக்குச்சத்துருவாய்வந்துபொருந்திய

விதியை நினைந்தழுவனோ, என்னை அக்னி சான்றாகப் பாணிக்கிரகணம் செய்த பிராணநாயகர், கொடும் பாவியாகிய தேனுமணி என்னும் தாசியினது மாயவலைக் குட் சிக்கிப் பெருநிதிக்குவைகளையெல்லாம் அவளுக்குக் கொடுத்துப் பரதேசியாகிக் காராக்கிரகம் புகுந்து கஷ்டப்படுவதை நினைந்தழுவனோ, எனது மாமியார் என்றும் மாசில்லாத இக்குடும்பத்திற்கு அவதூறு ஏற்றி வைக்கும் அறியாமையை நினைந்தழுவனோ, இவைகளில் எவற்றைக் கூறி அழுவேன் என்று பலவாறு கூறிப் புலம்பி ஆலோசனைக்கடலில் மூழ்கிக் கரையேற முடியாமலிருக்க, சூரியனும் மேற்றிசைக் கடலில் மூழ்கினன். அப்பொழுது சந்திரன் பலவகைப்பட்ட உயர்ச்சியினாலும் மேம்பட்ட ஆகாயமென்னும் பெண்மணியினது பிரகாசத்தையுடைய நெற்றியிலே சிந்தூரத்திலதம் விளங்கினாற் போலவும், இராக்காலமாகிய பெண் தன் அலங்காரத்தைப் பார்த்து மகிழும் கண்ணாடியைப் போலவும், நெடிய சங்கக் குண்டலத்தையுடைய சிவபெருமானுக்கு இந்திரன் கவித்த வெண்மையாகிய முத்துக் குடைபோலவும் உதயமாயினன்.

"துங்கவானென்னுமாதின் சுடர்நுதற்றிலதமென்னக்
கங்குலாமடந்தைபார்க்கும் கவின்கொள்கண் ணாடியென்னச்
சங்கவார்குழையாற்கிட்ட தாளவெண்கவிகையென்னத்
திங்கண்மாகடவுடோன்றச் சிறந்ததுஞாலமெல்லாம்"

இவ்வாறாய் அமையப்பெற்ற அன்றிரவு அர்த்தயாமத்தில் நம் கதாநாயகியாகிய வேதவல்லி நித்திரையின்றித் தனது படுக்கை அறையில் ஓர் நாற்காலி மீதிருந்து ஆலோசித்துக் கொண்டிருக்கின்றனள். அவ்வீட்டில் முன் இருந்த அலங்காரங்களெல்லாம் மாறிவிட்டன. அவளிருந்த அறையின் முற்பக்கத்தில் உள்ள சாலையில் ஓர் மண்ணெண்ணெய் விளக்கு மங்கிமங்கி எரிந்துகொண்டிருக்கின்றது. தரித்திராதேவி தாண்டவம் ஆடிக்கொண்டேயிருக்கிறாள். பிசாசுகளும் துஞ்சாநாய்களும் கண் துயிலும் அவ்வர்த்தயாமத்தில் அவ்வீட்டின் பிற்பக்கத் தோட்டத்தில் ஒரு ஆள் நடமாடும் அரவம் கேட்டது. சிறிது நேரத்திற்குப்பின், வேதவல்லி இருந்த அறையின் திறந்திருந்த சாளரவாயிலாக ஏதோ ஓர் கனத்தபொருள் வந்து தொப்பென்று இவளுக்கு முன் விழுந்தது. பயத்தினால் ஏக்கமுற்றி

ருந்த இவள் திடுக்குற்று அம்மாடீ! என்றலறிக் கீழே விழுந்து மூர்ச்சையாயினள். அவளைப்பற்றிக் கேட்பவர் யார் ஒருவருமில்லை. இவளின் அத்தை சிவகாமியோ, நெடுங்காலம் அருந்தவம் இருந்து பெற்ற புதல்வன் கடனுக்காகச் சிறைச்சாலைபுகுந்தானே என்று அற்பமேனும் துக்கமில்லாமல் தனது நாட்டுப்பெண் துக்கப்படுவதைக் கண்டு மகிழ்வதே பெருந்தவம் என்று எண்ணிக் கொண்டிருப்பவள். அன்றும் வழக்கம்போல ஊர்சுற்றிச் சாயங்காலம் வந்து நாட்டுப் பெண்ணாற்கொடுக்கப்பட்ட போசனத்தை உண்டு தனது படுக்கை அறையிற்போய் மனச் சஞ்சலம் இன்றி நித்திரைசெய்கின்றாள். வேதவல்லி சிறிதுநேரஞ் சென்றபின் தேற்றுவாரொருவரின்றித் தானே தேறித் தனக்கு முன்பாகக்கிடக்கும் பொக்கணத்தை அவிழ்த்துப் பார்த்தபோது ஓர் கடிதம் அதற்குட் காணப்பட்டது. விளக்கு வெளிச்சத்தில் கடிதத்தை வாசித்துப்பார்க்கப் பின்வருமாறு வரையப்பட்டிருந்தது.

கடிதம்

நெடுநாளாக என் உள்ளத்தைக் கொள்ளைகொண்ட விண்மணியான கண்மணியே! இக்கடிதத்தை நீ வாசிக்கும்பொழுது ஆச்சரியமுறுவாய். மெய்க் காதலின்றித் தாசிவீட்டே சதமெனக்கிடந்தலைந்த உனது நாயகனோடு கூடிவாழ்வது மரப்பாவையைமணாளனென்று மகிழ்ந்து இல்லறம் நடத்துவதுபோலாகும். உனது யௌவனமானது அனுபவிப்பவனில்லாதமங்கைப் பருவத்தை யுடையவளைப்போல அனியாயமாகக் கழிந்து போகின்றது. நீ என்னுடைய எண்ணத்துக்கு உடன்பட்டால் உடல்பொருள் ஆவிமூன்றையும் உனக்கே ஒப்படைத்து விடுகின்றேன். அன்றியும் பெருந்தொகைப் பணக்கடனை இறுக்கவியலாது சிறைச்சாலைபுகுந்த உனது மணாளனையும், குறித்த தொகையைக் கட்டி மீட்டுவிடுகின்றேன். நாளை இரவு இதே நேரத்தில் இவ்விடத்தில் வருகின்றேன். என்னுடைய எண்ணத்தைப் பூர்த்தி செய்ய மனமிருந்தால் இவ்வறைச் சாளரத்தைத் திறந்து வைத்து வெளிச்சமில்லாதபடி விளக்கை நிறுத்தி வைத்திருக்கவும். என்னை இன்னானென்று உனக்கு நன்கு தெரியும். இன்னும் இதிற்காணும் கையெழுத்தைக் கூர்ந்து பார்த்தாலும் விளங்கும்.

இங்ஙனம்

கெட்டித்தாளம்

என்றெழுதப்பட்ட கடிதத்தை வேதவல்லி வாசித்து முடித்த
வுடன் இருகண்களினின்றும் நெருப்புப்பொரிபறக்க ஆங்காரமிகுதி
யினாலே சரீரம் படபடத்துச் சர்வாங்கமும் அருவி பெருகினாற்
போலக் குறுவியர்வை கொப்பளித்து வேடனது அம்பினாற் புண்
பட்ட பெண்புலி போற் சீறினாள். உருத்திர கோபங்கொண்ட
பத்திரகாளியும் அச்சமயம் இவளைக் காண்பாளாயின் நடுங்கிப் பய
முறுவாள். “இல்லாதானிடத்துப் பசியும் செல்லாதானிடத்துக்
கோபமும்” என்ன செய்யும் என்றாற் போல இந்தச் சமயத்தில்
இவள் கொண்ட கோபம் ஒன்றும் செய்யமாட்டாது. ஆஹா! நான்
இச் செனனத்தினால் யாது பிரயோசனத்தை அடைந்தேன்.
சீச்சீ! இது என்ன வாழ்வு. என்ன உலகம். சிறு வயதில் அன்னை
யாரை இழந்தேன். பிதாவினால் கண்ணியமாக வளர்க்கப்பட்டு
அருமை நாயகரை மணந்தும் கொடிய காதகியாகிய எனது கெட்ட
விதி என் நாயகரையும் படுத்தாதபாடு படுத்தி ஈற்றிற் சிறைச்சாலை
புகச் செய்தது. குலத்தை விளக்க வந்த குணமணியாகிய எனது
புத்திரனையும் அநியாயமாக இழந்து போனேன். நீரில் தோற்றும்
குமிழி போன்ற இளமையினாலும், அதிலிருந்து
உண்டாகும். உருட்சியாகிய திரை போன்ற செல்வத்தினாலும்
அதில் எழுதிய எழுத்துப்போன்ற இச்சரீரத்தினாலும் ஒரு பிரயோ
சனமுமில்லை. இவ்வீட்டில் எங்கள் வேலையாளாகவிருந்து சொற்பச்
சம்பளம் வாங்கிச் சீவித்து, “குப்பை உயரக் கோபுரந் தாழும்”
என்றபடி தனவந்தனான வயிரமுத்தன் மனந்துணிந்து அற்ப
மேனும் பழிபாவத்துக்கு அஞ்சாது என்னுடைய உயிரினும்
மேம்பட்ட கற்புக்கு விலைபேசிக் கடிதம் எழுதிக் கொண்டு
வந்து எறிந்துவிட்டுப் போயிருக்கின்றான். முன்னர்ப் பலமுறை
யும் அவன் இங்குவந்து எங்கள் நிலைமைக்குப் பரிந்துபேசியவைக
ளெல்லாம் எதற்காகவென்று இப்பொழுது நன்கு விளங்குகின்றது.
தெய்வமே! இக்கெட்ட படவா நல்லாயிருப்பானோ; நான் சென்ற
ஜனனங்களிற் செய்துகொண்ட கன்மங்களே இச் செனனத்தில்
வருத்துகின்றது. “வாகத்து நேமிக்கும் வான் வாடு புள்ளினுக்கும்
மேகத்திறமும் வியன் மதியும் போல” என்றும் என்னை விட்டு நீங்
காதிருந்த பிராணநாயகரே! அடியாள் இவ்விடத்து அவதியுறத்
தேவரீர் சிறைச்சாலையிலகப்பட்டு எப்பாடு படுகின்றீரோ, பாதகி

யாகிய நான் ஒருவருடைய பற்றுக் கோடுமின்றித் தனிமையாக இவ்வீட்டின் கண்ணேயிருந்து துன்பமுறுவதேயன்றி அப்பாதகனாலும் யாது இடையூறடைவேனோ; அக்காதகனுடைய கோட்பாட்டுக்கு இணங்கி விலையுயர்ந்த கற்பாபரணத்தை இழந்து போவதினும் பார்க்க இன்றே எனது சீவிய ஓட்டத்தின் முடிவைக் காணப்போகின்றேன். "கைந்நாகத்துக்கும் கபவாய்க்கும் நாரைக்கும் பைந்நாகத்துக்கும் படருஞ் சிலந்திக்கும் மின்னாகியவுயிர்க்கும் பொருள் செய்த பெருமானே" அடைக்கலம்! அடைக்கலம்! நான் என்நாயகரோடு தண்டேன் றுளிக்கும் தருநிழற்கீழ்வாழ்க்கை வேண்டேன். சிவமே! உமது திருவடிப்பேற்றையே விரும்புகின்றேன். இளவேனில் மாலைக்காலமாய்க் குளிர்ச்சி பொருந்திய சோலையாய் மலரிலஞ்சிபூம்பொய்கை யருகாய் இயைந்த சந்திரகாந்தக் கல்லினாலாகிய மேடையாய், உவமை சொல்லுதற்கரிய பிள்ளைத் தென்றலாய் நிறைநரம்புள வீணைதன்னிசைப் பாடலிடமாய் இத்தியாதி வைபவங்களுடன் அனுபவிக்கும் இன்பம் பரமகருணாநிதியாகிய தேவரீருடைய திருமேனியைத் தரிசித்து ஆனந்தமுறுதலாகிய பேரின்பத்துக்குச் சமானமாகுமா? இல்லை! இல்லை!! அடியார்க்கடிய அருள் வள்ளலே!

"எண்ணுகேனென்சொல்லி யெண்ணுகேனோ
வெம்பெருமான் றிருவடியே யெண்ணி நல்லாற்
கண்ணிலேன் மற்றோர்களைகணில்லேன்
கழலடியே கை தொழுது காணினல்லால்
ஒண்ணுளேயொன்பது வாசல் வைத்தா
யொக்கவடைக்கும்போதுணரமாட்டேன்
புண்ணியாவுன்னடிக்கே போதுகின்றேன்
பூம்புகலூர் மேவிய புண்ணியனே"

என்று தோத்தரித்து அவ்வறையிலுள்ள ஓர் குறுக்கு மரத்தில் வஸ்திரத்தின் நுனியைக்கட்டி ஓர் நாற்காலிமீது ஏறி நின்றுகொண்டு மறு நுனியைக் கழுத்தில் மாட்டி ஏறி நின்ற நாற்காலியைக் காலினாற்றட்டி ஊசலாடினாள். அப்பொழுது அவ்வறைக் கதவு படீரெனத் திறக்கப்பட ஆ! கண்மணி! இஃதென்னை என்று அவளின் நாயகனான மாசிலாமணி முதலியார் நாணத்தையும் விடுத்து சிலையின் பிணிப்பை நீக்கி அவளைக் கட்டித் தழுவி,

"காற்றினில் வெயிலி லடிபடாவலேந்து
கண்முத்தமரும்பிலாக்கரும்பே
மாற்றருமடவிவரையிடைத்தூங்கா
மஞ்சத்திற்றூங்குசெந்தேனே
ஆற்றெணுதழற்செந் தீயடுப்பேற்றி
யட்டிடா நவரசப்பாகே
வேற்றொரு வரின்கை புகுந்துநூ லதனல்
வீக்குறுமெல்லிதழ் மலரே."

என்று கூறினன்.

ம-ா-ா-ஸ்ரீ மாசிலாமணி முதலியாரோடு உடன் வந்த அவனது நண்பர்களாகிய மாதர்கலாநிதிப் பத்திராதிபர் கோபாலகிருஷ்ண பிள்ளை அவர்களும் கநகசபாபதிப் பிள்ளையும் ஆகிய இருவரும் பிரமித்து நிற்கின்றனர்.

ஆறுவது அதிகாரம்

முற்றிற்று.

ஏழாம் அதிகாரம்.

ஞானப்பூங்கோதை:—வருக! வருக! சகோதரியே வருக! ஏது இன்று இக்குடிசையை நாடியது? யாவரும் க்ஷேமந்தானே?

நாகரெத்தினம்:—எல்லாரும் க்ஷேமந்தான். எனது நாயகர் நேற்றுச் சென்னைக்குப் போயினர். கநகசபாபதி அண்ணனும் அங்கு சென்றிருக்கின்றாராம் மெய்தானு?

ஞானப்பூங்கோதை:—எனது நாதர் ஏதோ அவசிய நிமித்தம் சென்றிருக்கின்றார். சகோதரியே! ஏது உனது முகம் வாட்டமுற்றிருக்கின்றது.

நாகரெத்தினம்:—அக்கா! எனது துக்கத்தின் காரணத்தை உன்னிடம் சொல்லாமல் வேறு யாரிடம் சொல்லுவேன். என்னுடைய பாழாய்ப்போன ஜெனனத்தினால் யாது பிரயோஜனத்தைப் பெற்றுக்கொண்டேன். ஒன்றுமில்லை. பாருங்கள் என்னைப் போன்ற பெண்களெல்லோரும் மன ஆறுதலும் சந்தோஷமும் உடையவர்களா யிருக்கின்றார்கள். நான் பிறந்த உடனே இறந்திருக்கப்படாதா? எனது இருமுதுகுரவர்கள் என்னை வளர்த்த அருமையும் எனக்குக் கல்வி கற்பித்தலில் எடுத்த பிரயாசையும் எவ்வளவு? இப்பொழுது நினைத்தாலும் என் வயிறு பற்றி எரிகின்றது. பாழாய்ப்போன எனது மாமன் அருணாசலம் பிள்ளை தனது இன உரிமை போய்விடப் போகின்றதென்று எனது அருமை தெரியாத அசட்டுக்கு மணம் புரிவித்தனர். அந்தோ! எனது நாயகனிடம் நான் அனுபவிக்கும் கஷ்டம் கொஞ்சமா? விலைகொடுத்து வாங்கிய ஆடுமாடு முதலியவிலங்கினங்களைச் சொந்தக்காரர்கள் எப்படிநடத்துவார்களோ அதுபோலவே நானும் தனக்கு அடங்கி அடிமை போலவேலை செய்து கஷ்டப்படவேண்டுமாம். பெண்களுக்குச் சுதந்திரமில்லையாம். சுவாமி தரிசனஞ்செய்ய நல்ல ஆடையாபரணங்களணிந்து ஆலயங்களுக்குப் போகக்கூடாதாம். எனது நேசிகளுடைய நேசத்தை விட்டுவிட வேண்டுமாம். எனது துன்பத்தை யாரிடம்சொல்லி ஆறுவேன். இப்பொழுது எனது தாய் தந்தையர் இருந்தால் என் நிலைமையைக் கண்டு மனஞ்சகிப்பார்களா? நீதி சாஸ்திரத்தின்படி நாங்கள் நடத்தவேண்டுமாம். அவர்களுக்கு நீதி சாஸ்திரங்கள் இல்லைபோலும், பாருங்கள்.

"கல்லாற்கினனொழுகலுங்காழ்கொண்ட
வில்லாளைக் கோலாற் புடைத்தலு—மில்லஞ்
சிறியாரைக் கொண்டு புகலுமிம்மூன்று
மறியாமையான்வருங் கேடு.

என்று நீதி நூலாசிரியர் கூறிய ஆப்தவாக்கியத்தை அறிந்தும் அறியார் போலப் பாவனை பண்ணிக் கோபம் வந்தபோதெல்லாம் அடித்து இம்சிக்கின்றார் என்று மேற்கொள்ள வார்த்தையாட முடியாமல் தேம்பித்தேம்பி அழுதனள். அப்பொழுது.

ஞானப்பூங்கோதை:—நாகரெத்தினத்துடைய நிலைமைக் கிரங்கி அவளது கண்ணீரைத் தனது வஸ்திரத்தினற் றுடைத்து அழுகையை மாற்றிக் கூறுகின்றாள். சகோதரியே! நான் இப்பொழுது சொல்லப்போவதை மன ஆறுதலோடு கேட்பாய். பெண்களுக்கு ஒருகாலத்தும் சுதந்திரமில்லை. அவர்கள் விவாகம் செய்யுமுன் தாய் தந்தையராலும் அதற்குப் பின் கணவனாலும் மூப்பிலே புத்திரர்களாலும் காப்பாற்றப்படல் வேண்டும். கணவனும் புதல்வரும் இல்லாதவர்கள் நாயகர்களுடைய பக்ஷத்தாராற் காப்பாற்றப்படல் வேண்டும். அவர்கள் இல்லாதபோது பெண்களுடைய தாய் பக்ஷத்தாராற் காப்பாற்றப்படல் வேண்டும். மேற்கூறிப் போந்த பாதுகாப்புகளுக் குட்படாதவர்களாய் தனித்திருக்க விரும்பும் பெண்கள் பிறந்த குலம் புகுந்தகுலம் இரண்டுக்கும் வசையுண்டாக்கிவிடுவார்கள். இது திண்ணம். பெற்றோர்கள் பெண்களுக்குச் சிறு பிராயத்திலேயே கடவுளுடைய குண மகிமைகளையும், கணவருக்குத் தொண்டு செய்யும் முறைமையையும் கற்பித்து வீட்டு வேலைகளைப் பழக்கல்வேண்டும். ஒரு பெண்ணினிடத்துப் பிரதானமாகவிளங்க வேண்டியது பதிவிரதா தருமமே.

"குலமகட்கழகுதன் கொழுநனைப் பேணுதல்"

என்றார் பெரியோர்.

சகோதரியே! மங்கலவாழ்வையும் செல்வத்தையும் விரும்பும் நன் மனைவியர்களின் செய்கைகளாவன, சூரியோதயத்துக்கு முன்னே நித்திரைவிட்டெழல், சிவத்தியானஞ் செய்தல், வீடு விளக்கஞ்செய்தல், பாத்திரஞ் சுத்தி செய்தல், தேவபூசைத் திரவியங்களமைத்தல், மாமன் மாமியாரை வந்தித்தல், நாயகர்களுடைய பணிவிடைகளைச் செய்தல், அவர்கள் சயனித்தபின் தாங்கள் சயனித்தல், அவர்கள் நித்திரை விட்டெழுவதற்கு முன்னே தாங்கள் நித்திரை விட்டெழல் ஆகிய இவைகளேயாம். இதுபற்றி யன்றோ தெய்வப்புலமைத் திருவள்ளுவ நாயனார், தமது இல்லாளாகிய வாசுகி என்னும் பெண்கள் நாயகம், நிலவுலக வாழ்வை நீத்தபோது அவர் இரக்கங்கொண்டு,

"அடிசிற்கினியாளே யன்புடையாளே
படிசொற்றவறாதபாவா—யடிவருடிப்
பின்றூங்கி முன்னெழூஉம் பேதையே போதியோ
வென்றூங்குமென்கணிரா."

என்று கூறியருளினர். இக்காலத்திலே சில பெண்கள் தம்முடைய நாயகர்கள் நித்திரை நீங்கிய பின் வெகு சிரமப்பட்டு நித்திரை நீங்கிப் படுக்கை அறையினின்றும்வெளியே வருவதும் விந்தையே! நாயகர்கள் நெற்றி வியர்வை நிலத்திற் சிந்த அரும்பாடுபட்டுச் சம்பாதித்த பொருளை வீண் செலவு செய்தும் அல்லது வேண்டிய வளவினும் மிதப்பக் கூறி வாங்கி உலோபஞ்செய்து வஞ்சகவுத வியினால் தேனீ போலச் சிறு பொருளீட்டியும் மணந்த நாயகர் களைத் துன்புறுத்தாது இல்லற தருமத்திற்கமைய நல்லவழியிலே செலவு செய்தலும் அவர்களோடு ஒத்திருத்தலும், அவர்கள் ஆணைப்படி நடத்தலும், கடுஞ்சொல்லின்மையும், இன் சொற் சொல்லுதலும் கற்புடையோர் செய்கைகளாம்.

பதிவிரதாசிரோமணிகள் தங்கள் வீட்டுக்கு வரும் துறவிகள் முதலிய பெரியோர்களையும் அதிதிகளையும் உபசரித்து அவர் களுக்கு அன்னங்கொடுத்தல் வேண்டும். குருடர், முடவர், வியாதி யாளர், விருத்தர் முதலாயினோர் வந்தால், முகமலர்சசியோடு இன் சொற்சொல்லி இயன்றமட்டும் பிச்சைகொடுத்து அனுப்பல் வேண் டும். இடி இடித்தாற்போல உரத்த சத்தத்தோடு பேசலாகாது. இனியகுரலோடு மிருதுவாகப் பேசுதல் வேண்டும்.

பெண்கள், நாயகர்களுடைய ஆயுள் பெருகும் பொருட்டு மஞ்சல் அணிதல் வேண்டும். இக்காலத்தில் பெரும்பாலும் இதை விட்டுச் சோப்புப் பாவிக்கின்றார்கள். கலியாண வீட்டிற்குத் தாலி கூறை, கண்ணாடி, மஞ்சள், சீப்பு, ஆகிய இவைகள் இல்லாது போனாலும் சோப்பு அவசியம் இருக்கவேண்டுமாம். ஒரு கலியாண வீட்டிலே பெண்ணினுடைய தாயார் பொன்னத்துப் பெட்டி வந்த வுடனே சோப்பும் வந்திருக்கிறதா வென்று கேட்டு அப்பெட்டி யைத் திறந்து பார்த்தனளாம். சோப்பு மயிர்த்துவாரங்களை அடை த்துப் போடுகிறதென்று சொல்லி ஐரோப்பியப் பண்டிதர்கள் சிலர் அதை விலக்கியிருக்கின்றார்கள். உடம்பிற்குக் கெடுதியை உண்டாக் குவதாகிய சோப்பை நம் சகோதரிகள் பாவிக்கும் அறியாமையே அறியாமை. இனி நாயகர்கள் இருந்தாலன்றிப் பெண்கள் அவர் கள் எதிரே இருக்கலாகாது. நாயகர்களுடைய உச்சிட்டத்தை அமிர்தம் போலப் புசித்தல்வேண்டும். நாயகர்கள் வீட்டிற்கு வரும் போது அவர்களை முகமலர்ச்சியோடு எதிர்கொண்டு கைகால் கழுவ

ஜலங்கொடுத்து உபசரித்தல் வேண்டும். இவைகளுக்கு மாருக இக்காலத்திலுள்ள சில பெண்கள் தங்கள் வேலைக்காரர்களைக் கொண்டாவது நாயகர்களைக் கொண்டாவது தங்களுக்கு விசேஷ உபசாரணைகள் செய்வித்துக் கொள்ளுகின்ருர்கள். அன்றியும் நாயகர்களோடு சமாசனத்தமர்ந்து மேசைமீது வைக்கப்பட்ட உணவை உண்கின்ருர்கள். சீச்சீ! வெட்கம்!! வெட்கம்!!!

தகாதவார்த்தை பேசுதல், தலைக்கடையிலே நிற்றல், பலகணி வழியாகப் பார்த்தல், சிரித்தல், பகலிலே நித்திரை செய்தல், ஆஞ்ஞை இல்லாமல் வெளியேபோதல், அயலாரோடுபேசுதல், பொதுப் பெண்களைப் போலப் பார்த்தல், கிடைச்சி, நூல், வர்ணக்கடுதாசு முதலியவைகளால் அமைக்கப்பட்ட மாலைகளைக் கூந்தலில் அழகு பெற அலங்கரித்து வேசியர்கள் போலக் கணைக்காலும் தனங்களும் தெரிய ஆடையுடுத்து நாணம், மடம், அச்சம், பயிர்ப்பு, என்னுங் குணங்களை விடுத்து ஆடவர் மத்தியில் அன்னம் போல் உலாவி அவர்களைக் காமுகர்களாக்குதல், முதிர்ந்த வயசுடையவர் இல்லாத வீட்டுக்குப் போதல், கூட்டத்தினுள்ளே புன்னகை செய்தல், வேசை தூர்த்தை மாயக்காரி கற்பிலி கெட்டவள் ஆகிய இவர்களுடன் கூடுதல், தாங்கள் விரும்பிய யிடத்திலே தூங்குதல், அயல் வீட்டிருத்தல், ஆகிய இவைகளெல்லாம் ஒழுக்கங்கெடுதற்கு ஏதுவாகும். ஆகையினுல் நற்பெண்கள் இவைகளை விட்டுச் சன்மார்க்க வழியொழுகுதல் வேண்டும்.

சகோதரியே! மனைவியர்கள் இயன்றமட்டும் நாயர்களுக்குக் கோபம் பிறவாவண்ணம் நடக்க முயலுதல் வேண்டும். ஒருபோது கோபம் பிறந்தால் அதனைப் பொறுத்துக்கொண்டு முகமலர்ச்சி காட்டி, இன்சொற்களைக் கூறி அதனைத் தணித்தல் வேண்டும். நாயகர்கள் ஓரோர்கால் அநீதியாகக் கோபித்துத் தண்டித்தாலும் தாங்களும் கோபித்து எதிர்வார்த்தை பேசாது மௌனமாகவிருந்து, இதம்பேசி அக்கோபத்தை ஆற்றல்வேண்டும். "பெண்டிர்க்கழகெதிர் பேசாதிருத்தல்" என்ருர் பெரியோர்.

பெண்கள் நாயகர்களுடைய குற்றத்தைப் பிறருக்குக் கூறலாகாது. "தூற்றும் பெண்டிர் கூற்றெனத்தகும்" என்றனர் ஔவை மூதாட்டி. அவர்களுடைய குற்றத்தைக் கனவிலும் நினைக்கலாகாது. அவர்களுடைய குணங்களையே பாராட்டி மெய்யன்போடு உபசரித்தல் வேண்டும். இருமுதுகுரவர் சகோதரர் முதலிய சுற்

றத்தவர்களெல்லாரிடத்திலும் பார்க்க நாயகர்களிடத்திலேயே அன்புவைத்தொழுகல் வேண்டும். நாயகர்கள் வீட்டில் இருக்கும் பொழுது மாத்திரமே தங்களை ஆபரணம், புஷ்பம் முதலியவைகளினாலே அலங்கரித்துக்கொள்ள வேண்டும். பெண்கள் கற்புநிலை தவறினால் குலங்கெடும். அதனால் எல்லாப் பயனுங் கெடும். பெண்கள் தங்களைத் தாங்களே காத்தல்வேண்டும். அதுவே அவர்களுக்குக் காவலாகும்.

"சிறைகாக்குங்காப்பெவன்செய்யுமகளிர்
நிறைகாக்குங் காப்பேதலை"

என்றார் திருவள்ளுவநாயனார்.

விவேகமில்லாத சில பெண்கள் செல்வர்வீட்டுப் பெண்கள் தரித்திருக்கும் ஆடை ஆபரணங்களைப் போலத் தங்களுக்கும் வாங்கித் தரும்படி நாயகர்களை வருத்துகின்றார்கள். கடன் பட்டாலும் வாங்கிக்கொடுத்தாலல்லாமல், திருப்தி யடையமாட்டார்கள். வாங்கிக் கொடாதபோது அவர்களை அவமதிக்கின்றார்கள். நாயகர்களுடைய சொற்படி நடவாத பெண்கள் நாய்களாயும் நரிகளாயும் பிறப்பார்கள். கணவர்களை இகழ்ந்த மனைவியர்கள் புலிகளாய்ப் பிறப்பார்கள். சோரநாயகர்களைக் கூடிச் சுகித்த சுந்தரிகள் பைசாச வடிவம் அடைவார்கள். ஆகையினால், சகோதரியே! ஏதோ எனது சிற்றறிவுக்கெட்டியவரைகூறினேன். இதைச்சித்தசமாதானத்தோடு சிந்தித்துத் தேர்ந்து அதன் வழியொழுகலே உத்தமம் என்றாள்.

நாகரெத்தினம்:—அக்கா! அற்பப்படிப்பு ஆபத்துக்குதவமாட்டாது. என்றபடி நான் கல்விக்கடலின் எப்பகுதியைக் கண்டேன், இப்பொழுது தாங்கள் கூறியவைகளையெல்லாம் நான் பூர்வஜன்மத்தில்செய்துவந்த தவவிசேடத்தினால் கேட்டறிந்தேன். இதுகாறும் எனது நாயகருடன் நடந்துகொண்டதற்கு மிகவும் பச்சாத்தாபப் படுகின்றேன். எது விதமும் நான் பிராணநாயகருக்குக் கடிதம் எழுதி மன்னிப்புப்பெற்று அவர் அடியில் இருந்து பணிவிடைசெய்தாலன்றி என் மனம் ஆறுதலடையாது. தாங்கள் கூறிய சற்போதனைகள் யெல்லாம மாணபரியந்தம் என் இருதயத்தை விட்டகலா என்று கூறி அவளிடம் உத்தரவுபெற்றுக் கொண்டு தன்வீட்டுக்குப் போயினாள்.

ஏழாவது அதிகாரம்.

முற்றிற்று.

எட்டாம் அதிகாரம்.

ஞானப்பூங்கோதை என்னும் பெண்மணியாற் கூறப்பட்ட சற்போதங்களையெல்லாம் கேட்ட நாகரெத்தினம், தான் இதுகாறும் தன் கணவனோடு நடந்துகொண்ட சச்சரவுவாழ்வுக் காகப் பச்சாத்தாபமுற்றுத் துக்கமடைந்து, நாலைந்து நாளாக அன்னஆகாரமில்லாமல் அரும்பாடுபட்டுத் தன் நாயகனுக்குப்பல மன்னிப்புக் கடிதங்கள் அனுப்பினாள். ஒன்றிற்காவது பதில்வரவில்லை. துக்கமிகுதியினாலும் ஏக்கத்தினாலும் உடம்பு மெலிந்து துரும்பாய் விட்டது. சதா கண்ணீருங்கம்பலையுமாய்க்கதறி அழுது புலம்பிக்கொண்டிருக்கின்றனள். முன்னர் ஓர் கால் தன் நாயகனை உதாசீனமாகப் பேசி இகழ்ந்ததை நினைந்து நினைந்து இனிமேல் அவன் முகத்தில் எவ்வாறு விழிப்பதெனச் சங்கோசப்படுவாள். இவள் கொண்ட சங்கோசமாகிய சிறு பூளைப்புஷ்பமானது, ஞானப் பூங்கோதை கூறிய சற்போதமாகிய பெருங் காற்றில் எடுபட்டுப் போயிற்று. நாட்கள் பல கழிந்தன.

ஒருநாள் நாகரெத்தினம் வழக்கம்போல ஞானப்பூங்கோதை வீட்டிற்குவந்தபோது அவள் அசனச்சாலையில் உணவு அருந்திக் கொண்டிருந்தாளாதலின், அவ்வீட்டின் நடுமத்தியில் வைக்கப்பட்டிருந்த மேசைக்குப் பக்கத்தேயுள்ள ஒரு நாற்காலிமீதிருந்து குறித்த மேசையின்மீது புத்தகரூபமான ஓர் பத்திரிகை இருக்கக்கண்டு எடுத்துப்பார்த்தாள். அது தனது நாயகனால் சென்னையில்நடத்தப்படும் "மாதர்கலாநிதி" என்னும் பத்திரிகையா யிருந்தது. அதைப்பிரித்துப் பார்க்கும்பொழுது காணப்பட்ட விசேஷ அறிவித்தலினால் தன்னுடைய நாயகன் இரண்டோர்தினத்தில் யாழ்ப்பாணம் வருவதாக அறியக்கிடந்தது இவள் கார்காலத்தைக் கண்ட கலாப மஞ்ஞைபோலச் சந்தோஷமுற்றிருந்தாள். ஞானப்பூங்கோதையும் போசனஞ் செய்துவிட்டு அவ்விடம் வந்தாள். அவள் வரு

வதைக்கண்ட நாகரெத்தினம் வெட்கமிகுதியினால், பத்திரிகையைக் கீழேநழுவவிட்டு விடுகின்றாள். அதைக்கண்ணுற் கண்டும் காணாத வள்போலப் பாவனை பண்ணிய ஞானப்பூங்கோதை அவ்விடத் துள்ள பிறிதோராசனத் தமர்ந்து சிறிதுநேரம்சந்தோஷமாகவார்த் தையாடியபின் தனது நாயகனால் தனக்கு எழுதிய ஓர் கடிதத்தை காட்டினள். அதில் இவளுடைய நாயகனாகிய கநகசபாபதிப்பிள்ளை, தன் சிநேகனும் மாதர் கலாநிதிப் பத்திராதிபரும் ஆகிய ஸ்ரீமான் கோபாலகிருஷ்ண பிள்ளை அவர்களையும் அழைத்துக் கொண்டு இரண்டோர் தினத்தில் யாழ்ப்பாணம் வருகிறதாகக் கண்டிருந்தது. நாகரெத்தினம் அவளைப்பார்த்துச் சகோதரியே! சிறிதுநேரத் திற்குமுன், இம்மேசையிற் காணப்பட்ட பத்திரிகையினால் யாவும் அறிந்தேன். நான் எத்தனையோ மன்னிப்புக்கடிதங்கள் அனுப்பி னேன். இதுவரை அவைகளுக்குப் பதிற்கடிதம் கிடைக்கவில்லை. அந்தோ! என்மீது அவர் உண்மையான நேசம் பாராட்டுவாரோ, அன்றிக் கடுங்கோபங் காட்டுவாரோ அறியேன். அவருக்குப் பணி விடைசெய்து எனது எஞ்சியகாலத்தை நல்லவழியிற் செலுத்தக் கொடுத்துவைக்காதபாவி அல்லவா என்று கண்ணீர் சிந்திக் கதறி யழுதனள். ஞானப்பூங்கோதை அவளைக்கட்டித் தழுவிக் கண்ணீ ரைத் துடைத்துச் சகோதரியே! நீ ஒன்றுக்கும் யோசிக்க வேண் டாம். உனது நாயகர் அறிவிற் குறைந்தவரல்ல; ஏதோகஷ்டகாலத்தி னால் உங்களிருவருக்கும் பிணக்குண்டாய்ப் பிரிந்திருக்கும்படி நேரிட்டது அவர் இப்பொழுது உன்னுடையவிண்ணப்பத்துக்கிரங் கியே இங்குவருகின்றார். உன்னைக் கைவிடமாட்டார். நீ எப்பொழு தும் கண்ணீருங்கம்பலையுமாய் அழுதுபுலம்பி அன்னாகாரத்தையும் வெறுத்து உடம்பைக் கேவலப்படுத்தவேண்டாம் என்று கூறி மன ஆறுதல் செய்து கொண்டிருக்கும் அப்பொழுது அவ்வீட்டுவாயி லில் இரட்டைக் குதிரை பூட்டிய ஓர் வண்டிவந்து நின்றது. இரு வாலிபர்கள் அவ்வண்டியினின்றும் இறங்கி வண்டிக்காரனுக்குக் கொடுக்கவேண்டிய கூலியைக் கொடுத்துவிட்டு உள்ளே போன போது வீட்டின் நடுமத்திக்கூடத்திலிருந்து சம்பாஷித்துக்கொண் டிருந்த இரண்டு பெண்மணிகளும் திடுக்கிட்டு எழுந்து ஆச்சரி யத்தோடு நின்றனர். அங்குவந்த இருவருள் ஒருவன் ஞானப்பூங்

கோதையின் நாயகனாகிய கநகசபாபதிப் பிள்ளை. மற்றயவன் அவ னுடைய பிராண சிநேகிதனும் நாகரெத்தினத்தின்நாயகனும் ஆகிய கோபாலகிருஷ்ணனுமே என்பதை வாசகர்கள் ஞாபகத்தில் வைத் திருப்பார்களாக.

கநகசபாபதிப் பிள்ளைக்கு, தன்னுடைய வீட்டிலே தனது நண்பனின் மனையாள் இருந்ததைக் கண்டபோது பேரானந்தமுண் டாய்விட்டது. தனது நண்பனுக்கு அவன் வேண்டிய புத்திமதி கூறி அவர்கள் இருவருக்கும் உள்ள ஊடலை நீக்கி அன்று விருந்தி ட்டு அவர்கள் வீட்டிற் கொண்டுபோய் விடுத்துத் தன் இல்லம்புகு ந்து பகல் முழுதும் தனது நண்பர்களுடனேவார்த்தையாடி இராக் காலமானவுடன் உணவருந்தி, சயனக் கிரகம் அடைந்து தனது நாயகியின் வரவுக்கு எதிர்பார்த்திருந்தனன். அப்பொழுது அங்கு வைக்கப்பட்டிருந்த கெடியாரம் பத்துமணி அடித்து, நாற்பது நிமிஷமாய்விட்டது. ஞானப்பூங்கோதை தானும் உண வருந்தி இயன்றவரைதன்னை அலங்கரித்து வெள்ளித்தட்டில் தாம்பூலம் எடுத்துக்கொண்டு குறித்த அறையில்வந்து தட்டை அவனுக்கு முன்னே வைத்து நமஸ்கரித்து வெட்கி ஓர்புறமாக ஒதுங்கி நின்றனள். அவன் அவளைக் கட்டித் தழுவித் தன்னோடு டன் இருத்திக் கூறுகின்றான்.

கநகசபாபதிப்பிள்ளை:—கண்மணி! நீ எதற்காக வெட்கி ஒது ங்கி நின்றனை? புதுப்பெண்ணல்லவே! எனது வீட்டினின்றும்இங்கு வந்த காரணம் என்னை? முன்கடிதமூலமாக நான் கேட்டபோது எல்லாம் விபரமாக நேரே கூறுவதாக எழுதியிருந்தாய், எனது சகோதரி கமலாம்பாள் உன்னைப்பற்றிக் குற்றமாகக் கடிதம் எழுதியிருந்தாள். நான் அவைகளை நம்பவில்லை. நடந்தசம்ப வம என்னை?

ஞானப்பூங்கோதை:—நடந்த சம்பவங்களைக் கூறித் தங்களு க்கு வருத்தமுண்டாக்க விருப்பமில்லை யாயினும் கட்டளைக்கமை ந்து கூறுவது அவசியமாகும். அருமைநாயகரே! தாங்கள் சென் னைக்குப்பிரயாண மான மறுநாள் தங்கள் சகோதரிவேண்டுமென்று தனது வஸ்திரத்தை நெருப்பில் எரித்துவிட்டு என்மீது பழிசாற்றி

அக்காரணத்தை வைத்துக் கொண்டு என்னை வைது கூந்தலிற்பிடித்து வெளியே கொண்டுவந்துவிட்டுக் கதவைமூடி உள்ளேபோயினுள். தாங்கள் இல்லாதகாலத்து நான் வெளியேறுவது சரியல்லவெனத் துணிந்து உள்ளே போனேன். அவள் பிரமராட்சசிபோலச் சீறிக்கோபித்து ஓடிவந்து எனது மார்பிற்புடைத்து மீட்டும் வெளியே தள்ளி உள்ளேவந்தால் அடித்துக்கொன்றுவிடுவதாக அச்சுறுத்திக் கதவைப் பூட்டிக்கொண்டு போயினுள். நான் என்னுயிரைக் காப்பாற்றுநிமித்தமாக எனது சிறுவனையும் அழைத்துக் கொண்டு சிறியதந்தையாருடைய இவ்வீட்டில் வந்து அவருடைய ஆதரவின் கீழ் இருந்தேன். அவரும் தன்னுடைய காணிபூமி நகை பொருள்கள் ஆகியவைகளையெல்லாம் எனக் காக்கிவிட்டுப் பரலோகப் பிராப்திபாயினர்.

கநகசபாபதிப்பிள்ளை:—இன்பரசக்குயிலே! எந்தெந்தக் காலத்தில் எவரெவர் எதை எதை அனுபவித்தல் வேண்டுமோ அந்தந்தக் காலத்தில் அவரவர் அதையதை அநுபவித்தேதீருதல் வேண்டும். இது ஈசுவராஞ்ஞை. சென்று போனவைகளைப் பற்றி யோசிப்பதிற் பிரயோசனமில்லை. என்னேடுடன்பிறந்த சகோதரியாயினும் அவள் செய்ததுஷ்டகிருத்தியத்தின் பலனை அனுபவித்தாள். இந்நிலவுலகில் அவள் சீவிப்பது பரமகருணாநிதிக்கு இஷ்டமில்லாமையினாற்றான் போலும். அவளை யமனுக்கு விருந்திட்டனர். பிறகு, "எனதுசிறுவன்" என்றாயே அவன்யார்?

ஞானப்பூங்கோதை:—இன்னுயிர் மணாளரே! சில மாசங்களுக்குமுன் நான் தங்களுடைய வீட்டில் இருக்கும் பொழுது ஒருநாள் ஒருயாசகன் அழகே யோருருவாயமைந்த ஓர் குழந்தையையும் உடன்கொண்டுவந்து பிக்ஷை கேட்டான். அப்பொழுது நான் அவனுக்கு பிக்ஷை கொடுக்கும்போது அச்சிறுவன என்னைக் கண்டவுடன் அம்மா! அம்மா! எனக் கூவிக் கொண்டு ஓடிவந்து என்காலைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டு அவனிடம் போகச் சம்மதியாது கதறி அழுதான். அவன் பலாத்காரமாகக் கொண்டு போக எத்தனித்தான் நான் இரக்கங்கொண்டு இக்குழந்தையை எனக்குத் தருகின்றாயா என்று கேட்க, அவன் "அம்மா! எனது வறுமைப்பிணி நீங்கத்தாங்கள் அணிந்திருக்கும் வைரம் பதித்த காப்பைத்தருவீர்களாயின் சிறுவனைத்தந்துவிடுகின்றேன்" என்றான்.

உடனே அப்பிள்ளைமீது கொண்ட அவாவினால், காப்பைக் கொடுத்துச் சிறுவனை வாங்கி வளர்த்துவருகின்றேன். தங்களுடைய அனுமதியின்றி இவ்விஷயத்தில் என்னுடைய எண்ணப்படி நடந்துகொண்ட குற்றத்தைப் பொறுத்துக் கொள்ளும்படி வேண்டுகின்றேன் என்று கைகூப்பி வணங்கினாள்.

கநகசபாபதிப்பிள்ளை:—வஞ்சிக் கொடியே! நான் என் ஆயுள் பரியந்தம் மகிழ்ச்சியடையக் கூடிய நன்மையைச் செய்திருக்க மன்னிக்கிறது எதை? நீ அப்படி ஒரு தவறும் செய்திருக்கவில்லையே என்று கூறி அவளைத் தழுவி முத்தங் கொடுத்தான். இவர்களிருவரும் அன்றிரவு மேற்கண்டபடி சம்பாஷித்துப் பேரானந்தக் கடலில் மூழ்கி நித்திரையாயினர்.

எட்டாவது அதிகாரம்

முற்றிற்று.

ஒன்பதாவது அதிகாரம்

சென்னைமாநகரில் மாசிலாமணி முதலியார், தற்கொலை செய்ய எத்தனித்த தனது மனைவியாகிய வேதவல்லியை அகால மரணத்தினின்றும் மீட்ட அன்றிரவு அவளைப் பார்த்துக் "கண்மணி! என்னகாரியம் செய்யத்துணிந்தாய். பாதகனாகிய நான் இதுகாறும் உனக்குச் செய்து வந்த கொடுமைகளெல்லாம் இவ்வளவென்று சொல்லுந் தகுதியுடைத்தோ. என் பகுத்தறிவு பாழாய்ப் போகக் கேவலம் போகம் விற்கும் பொதுப்பெண்ணுடைய மாய வலைக்குட்சிக்கி உன்னை எவ்வளவோ பாடுபடுத்தினேன். அவைகளையெல்லாம் பொறுத்த அருமை நாயகியே! உத்தம பத்தினியே!

உயிர்க்குறு துணையே! பாவியாகிய நான் உன்னுடைய அன்பின் பெருக்கை அறிந்திருந்தேனாகில் இத்தனைபாடேன்? இழிவுறு சிறையேன்? சத்தியம்! சத்தியம்!! இனிமேல் வேறு பெண்களைக் கனவிலும் விரும்பேன். இது திண்ணம் என்று கூறித் தான் செய்த குற்றத்தை மன்னிக்க வேண்டினான். அப்பொழுது அவள் வணங்கிப் பிராணவல்லபா! தாங்கள் என்னை இவ்வளவு தூரம் வியந்து பேசுவது சரியல்ல; எப்படியோ அடியாள் தங்களுடைய ஊழியக்காரியல்லவா? பாவியாகிய என்னுடைய துரதிர்ஷ்டத்தினால் சகித்தற்கரிய துன்பங்களையெல்லாம் அனுபவித்தீர்கள். தங்கள் காலடியில் வணங்கி மன்னிப்புப் பெறவேண்டியவள் நானாகவிருக்கத் தாங்கள் மன்னிப்புக் கேட்பது நீதியன்று என்று அவன் காலடியில் வீழ்ந்து வணங்கினள். அப்பொழுது அவன் மாணிக்க தீபமே! மாதவக்கொழுந்தே! இதுகாறும் நம் இருவருக்கும் கஷ்டத்தைத் தந்தருளிய கருணாநிதி இனியேல் நன்மையைச் செய்தருளுவர். முதல் அப்பெருமானுக்கும் இரண்டாவது நமது ஆப்த நண்பர்களாகிய கனகசபாபதிப்பிள்ளை கோபாலகிருஷ்ணப் பிள்ளையாகிய இருவருக்கும் மனப்பூர்வமான வந்தனம் செலுத்தி ஆயுள் பரியந்தம் நாம் வழி வழி அடியர்களாகவிருத்தல் வேண்டும். ஏனெனில் நான் பெருந்தொகைக் கடனாளியாய் அதை இறுத்துக் கொள்ள வழியின்றிச்சிறைச்சாலைபுகுந்துச் செய்வதின்னதென்று அறியாது அழுது புலம்பிக்கொண்டிருக்கும்பொழுது குறித்த இருவரும் இன்றுகாலையில் சிறைச்சாலைக்கு வந்து என்னிலைமைகண்டு இரக்கமுற்று நான் கொடுக்கவேண்டிய கடன தொகையைக் கோர்ட்டில் கட்டி என்னை மீட்டுக்கொண்டு வந்தார்கள். அவர்கள் என்னை மீட்காவிட்டால் நான் உன்னைக் காணுவதேது என்று கூறிக் கொண்டிருக்கும் போது இவர்கள் இருந்த அறையின் அடுத்த அறையில் உள்ள ஓர் விட்டமரம் பழுதுற்றிருந்ததாதலின் கீழே வீழ்ந்தது. அப்போது கலகல வென்னும் ஓர் ஓசையுண்டாகியது. இருவரும் திடுக்கிட்டு ஆச்சர்யமுடையவர்களாய் அவ்விடத்தைப் பார்க்கும் போது விட்டமரம் வீழ்ந்த இடம் குழிபறிந்திருந்தது. இவர்கள் அவ்விடத்தைச்சோதித்துப் பார்க்க அப்புதலுக்குள் ஓர் செப்புக்குடம் புதைக்கப்பட்டிருந்தது. அதன் மேல் மூடியில்,

"இதற்குள் ஒரு லக்ஷத்தைம்பதினுயிரம் தங்கப்பவுன் சேமித்து வைத்திருக்கின்றேன். எனது குமாரன் செல்வத்தை இழந்து கஷ்டப்படுங் காலத்துத் தெய்வசகாயமும் இருக்குமாயின் இதை எடுத்து அனுபவிக்கும் உரிமையுள்ளவனுவான்"

மாணிக்கவாசக முதலி.

என்று எழுதப்பட்டிருந்தது. இருவரும் ஆனந்தசாகரத்தில் மூழ்கினவர்களாய்க் குடத்தை உடைத்துப் பார்த்தபோது, மேலே கண்ட விபரப்படியே தங்கப்பவுன் இருக்கப் பரமகருணாநிதியாகிய பெருமானைத் துதித்து, ஆனந்தமுற்றிருந்தனர். வேதவல்லியானவள் நாயகனை மகிழ்விக்கும்படி சந்தோஷமுள்ளவளாகவே நடித்தாளே யாயினும், பத்துமாதம் சுமந்து பெற்ற அருந்தவப் புதல்வன் காணாமற் போயினனே என்று அவன் பிரிவாற்றாமையினால் தன்னுள் சதா அழுது புலம்பிக்கொண்டிருந்தனள். தன்னுடைய குமாரனும் அவனுடைய மனைவியும் இடையறாப் பேரன்புகொண்டு வாழ்வதைச் சிவகாமியானவள் கண்டு பொறாமைத் தீ பொங்கியெழச் சகிக்கலாற்றாதவளாய் நெருப்பிலகப்பட்ட புழுப்போற் றுடித்தாள். பாவம். யாது செய்வாள்? தான் கூறும் கபடவார்த்தைகளையெல்லாம் இனிமேல் தன் மகன் கேட்கமாட்டான் என்பது நன்கு தெரியும். மருமகள் மீதுகொண்ட கோபம் பொறாமையைப் போலவே தன் குமாரன் மீதும் கொண்டாள். கொடும்பாவிமனம் புழுங்கினாள். குமாரனை மனம் போனவாறு ஏசினாள். தலையணைமந்திரோபதேசஞ்செய்து தன் மகனை வசப்படுத்திக்கொண்டனள் என்று வேதவல்லியைப் பல பேரறியத் தூற்றினாள். தன் மகன் புதையல் எடுத்தான் என்பதை உற்ற சிநேகிதியாகிய கோகிலாம்பாளுக்குக் கூற அவள் குடிகெடுக்கும் குண்டுணிச் சங்கக்காரியதரிசியாதலினால் மற்றும் தனது நேசிகளுக்கும் கூற இப்படியே கேட்டார் வாய்கேட்டுச் சென்னைமாநகரம் முழுவதும் பரந்து அதிகாரிகளுக்கும் எட்டியது.

அடுத்தநாள் அதிகாரிகள் இவன் வீட்டிற்கு வந்து விசாரித்தபோது அவன் ஒன்றையும் மறைக்காது நடந்ததை உள்ளபடியே கூறி எடுத்த புதையலை அவர்கள் வசம் ஒப்புவித்தான். அவர்கள் கச்சேரிக்குக் கொண்டுபோய்ப் பணத்தைப் பத்திரப்படுத்தி இதன்

விபரங்களைக் குறித்து அப்பொழுது சென்னைக்குத் தேசாதிபதி யாயிருந்த "சேர் றபேட்" என்னும் பெருந்தகை யாருக்கு அறிவிக்க அம்மகத்துவ தேசாதிபதியவர்கள் உண்மையைச் சீர் தூக்கி ஆராய்ந்து (சர்வரக்ஷகரால் இவனுக்குக் கொடுக்கப்பட்ட புதையல் இவனுக்கே உரியது. அதிகாரிகள் இதிற்றலையிட்டுப் பறிமுதலாக்குவது நீதியன்று) என்று உத்தரவு செய்ய அவருடைய கட்டளைப்படி அதிகாரிகள் புதையல் முழுவதையும் மாசிலாமணி முதலியாரிடம் ஒப்புவித்து விட்டனர். இது நிற்க,

மாசிலாமணி முதலியார் இருந்த வீட்டின் ஐந்தாவது மாளிகை, காண்பவர் கண்களைக் கவரத்தக்கதாக விருக்கின்றது. தஞ்சை வைரமுத்தா பிள்ளையுடைய மாளிகை என்பது எவர்களுக்கும் தெரியும். இவர் எட்டுப்பத்துக்கோடி ரூபா ரொக்கம் நகைக்கும் அதே ரூபாத்தொகை கொண்ட காணி பூமிக்கும் உரித்தாளியாய் இட்சுமி கடாட்சத்துடன் வசிக்கின்றனர். இவர் முன் சென்னை ரேவுத்துறைமுகத்தில் இரண்டணு நான்கணுக் கூலிக்காக மூட்டை சுமந்து அதனாற் சீவியம் பணணிக்கோடிச் சீமானுய் வந்தனர். இவர் நெற்றிவியர்வை நிலத்தில் வீழச்சம்பாதித்தபெருந்தொகைப் பொருளைத் தம் உபயோகத்துக்கு மாத்திரம் செட்டாகச்செலவு செய்துகொள்வார். இவருக்கு இப்பொழுது ஐம்பத்தாறு வயசு நடக்கின்றது. பார்ப்போர் எழுபது எண்பது வயசென்றே மதிப்பார்கள். காரணம் யாதெனில் இவருக்கு இருபது வயதாயிருக்கும்போது கண்ணம்மாள் என்னும் பெண்மணிக்காக அவளின் பெற்ருேர்களுக்கு இரண்டாயிர ரூபா கொடுத்து விவாகஞ் செய்தனர். அவள் ஐந்து வருடம் இல்லறம் நடத்த உதவியாயிருந்து பர்லோகப் பிராப்தியாயினள். இதன் பின் பத்துவருஷத்துக்குள் ஒருவர்பின் ஒருவராய் ஐவர் மனைவியரை மணந்தும் ஒவ்வொருவரும் அந்தகன் உலகு அடைந்து விட்டனர். பெண்களைப் பெற்றவர்களுக்கு உபகாரமாகக் கொடுத்த ரூபா இருபதினுயிரத்துக்கு மேலாய் விட்டது. இனிமேல் விவாகஞ் செய்வதற்காக ஒருபைசா வேனும் செலவு செய்வதில்லையெனச் சத்தியஞ் செய்து ஊருக்கொருதாசியும் தெருவுக்கொரு வைப்பாட்டியும் வைத்திருந்தார். இதனுல் இவருடைய வாலிபம் பிஞ்சிலே பழுத்து வார்த்திபமாய் விட்டது. இன்னும் இவர் மரியாதையாயிருந்த எத்தனை குடும்பஸ்

திரீகளைக் கெடுத்து விட்டனர். இவர் தான் நம் கதா நாயகியாகிய வேதவல்லியையும் வசப்படுத்த எண்ணி முன் அவள் தனித்திருக்கும்போது தண்டித்துப் பார்த்துக் கடிதமும் எழுதியவர். அவளுக்குக் கடிதம் எழுதிய மறு நாள் வயிரமுத்தாபிள்ளை என்பவர் இராப்போசனம் உண்டு "ஒப்புயர்வில்லா உத்தமக்கற்பரசியாகிய வேதவல்லியிடம் செல்ல முடியாமல் இருக்கின்றதே. அவளுடைய நாயகன் சிறைச்சாலையினின்றும் மீண்டு வந்துவிட்டனனே. நாம் இன்று போவதுநல்லதா? அல்லது ஆலோசித்துப் போவது நல்லதா" என்று தர்க்கித்து மன ஆறுதல் இன்றி இருந்தனர். அப்பொழுது அவ்வீட்டுக்கதவு படீரெனத் திறக்கப்பட்டுத் தீவர்த்திக் கொள்ளைக் கூட்டத்தார் உள்ளே வந்து வாயிற் படுத்திருந்த சமயற்காரனை ஒரு கத்தியினால் வெட்ட அவன் "ஆ! செத்தேன்" என்றலறிக்கொண்டு பூமியிலே விழுந்து அந்தகனுலகம் புகுந்தான். தனது வீட்டில் நடக்கும் சம்பவத்தைக் கண்ட வயிரமுத்தாபிள்ளை .செய்வதின்னதென அறியாது மயங்கிக் கீழே வீழ்ந்து விட்டனர்.

தீவர்த்திக் கொள்ளைக்காரர் அவ்வீட் டெசமானாகிய வயிரமுத்தா பிள்ளைக்கு அறிவு வரப்பண்ணிப் பணப்பெட்டியின் சாவியைக் கேட்க அவர் ஒன்றும் பேசாது மௌனமாகவிருக்க, அக்கூட்டத்தில் நின்றவர்களுள் ஒருவன் கையில் எண்ணெய்ச் சீலையைச் சுற்றிப்பந்தத்தைக் கொளுத்தி விடடா! கொளுத்தாமற் போனால் இவன் பணப்பெட்டியின் சாவியைச் கொடுக்கமாட்டான். என்று சொல்லியதை மற்றவன் கேட்டு "ஆம் மயிலே! மயிலே! இறகு கொடு என்றால் கொடுக்குமா? அதைப் பிடித்து மிதித்துக் கொண்டே பிடுங்குதல் வேண்டும்" என்று குனிந்து வைரமுத்தா பிள்ளையின் கைவிரல்களில் எண்ணெயில் தோய்த்த துணியைச் சுற்றி நெருப்பைக் கொளுத்தி விட்டார்கள். வீட்டெசமான் வேதனை பொறுக்க முடியாமல் கூவே கூ! சகஸ்திரகூ! கொள்ளை கொள்ளை! கேள்வி முறை இல்லையா? கேட்பாரில்லையா! அந்தோ! கொல்லுகின்றார்களே என்று அலறித்துடித்து மரணமாயினர். திருடர்களும் அகப்பட்டவரையில் வாரிச்சுருட்டிக் கொண்டு ஓட்டம் பிடித்துவிட்டனர். இத்தீவர்த்திக் கொள்ளைப் பற்றிப் பரிதபிக்காதாரில்லை, அரசினர் திருடர்களைப் பிடித்தற்கேற்ற வழிவகைகளெல்லாம் செய்தும் பிரயோசனப்படவில்லை' வைரமுத்தா பிள்

ளைக்கு உரிமைக்காரர் ஒருவரும் இல்லாமையினால் அரசினரே பிரேதங்களை எடுத்துத் தகனம் பண்ணி எஞ்சிய காணி பூமிகளை ஏலத்தில் விற்று பணத்தைக் கஜானாவில் சேர்த்துவிட்டார்கள். கற்புடைமாதர்களை இச்சித்த கசடர்கள் அழிந்து நாசமுறுவார்கள் என்பது திண்ணம்.

பண்டோரான் பெண்ணமைத்து இருவருக்கும் மண
மியற்றிப் பாணிரக்கங்
கொண்டமித்தமுறைகடந்து கள்ளவழிப்புணர்ச்சி செய்யுங்
கொடியோர்தம்மை
மண்டலமே வாய் பிளந்து விழுங்காயோ
வவர்தலைமேல் வானுலாவுங்
கொண்டலே பேரிடியை வீழ்த்தாயோ
விது செய்யிற்குற்றமாமோ.

என்று ஆன்றோர் கூறிய வாக்கு வீண் போகுமா? இல்லை! இல்லை!!

ஒன்பதாவது அதிகாரம்.

முற்றிற்று.

பத்தாம் அதிகாரம்.

யாழ்ப்பாணத்தைச் சார்ந்த நல்லூரிலே ஒருநாட்காலமே ஒரு வாலிபன் தன் மனைவியைப் பார்த்து, கண்மணி! இக்கடிதத்தைப் பார்த்தாயா? இதோ தபாற்காரன் தந்துவிட்டுப் போகின்றான். நமது நண்பர் மாசிலாமணி முதலியார் அனுப்பியிருக்கின்றனர்.

இந்த மாசம் 28௨ "இலட்சுமி வாசம்" என்னும் மண்டபத்தில் 'ஐக்கியப் பிரவிர்த்திச் சங்கம்" என்னும் பெயரோடு ஒரு மகாசபை கூடப் போகின்ருர்கள். அதில் நமது முதலியார் "அன்பும் கண்ணப்பநாயனுரும்" என்னும் விஷயத்தைப் பற்றிப் பிரசங்கிப்பார். அதற்கு எங்கள் இருவரையும் அவசியம் வரும்படி எழுதியிருக்கின்ருர். ம-ா-ா-ஸ்ரீ கநகசபாபதிப் பிள்ளை அவர்களையும் வரும்படி அவருக்குக் கடிதம் வந்திருத்தல் வேண்டும். ஆகையினுல் அவரிடம் சென்று அவருடைய உள்ளக்கிடக்கையை அறிந்து வருகின்றேன். நீயும் அவசியம் வருதல் வேண்டும் என்ருன். அப்பொழுது நாகரெத்தினம் வணங்கி அருமை நாயகரே! தங்களுடைய வார்த்தைக்கு எதிர் வார்த்தை பேசமாட்டேன். எப்படி நடக்க விருப்பமோ அப்படியே நடக்க அடியாளுக்கும் பூரண சம்மதம் என்று சொல்லும் போது அகஸ்மாத்தாய்க் கநகசபாபதிப்பிள்ளை அங்கு வந்து இருவரும் சிறிது வார்த்தையாடிச் சென்னைக்குப் பிரயாணமாக வேண்டிய ஏற்பாடுகள் செய்து கொண்டு பிரிந்தனர்.

ஆங்கீரச ௵ ஐப்பசி மீ 8௨ நமது கதாநாயகர்களாகிய கோபாலகிருஷ்ணப் பிள்ளை கநகசபாபதிப் பிள்ளை என்னும் இருவரும் குடும்பசமேதராய் காங்கேசன் துறையை அடைந்து வங்கமேறி ஐந்தாநாள் சென்னைத் துறையில் இறங்கி இவர்களது வரவுக்குக் காத்திருந்த மாசிலாமணி முதலியாரோடு துரக (குதிரை) வண்டியேறி அவர் வீட்டிற் சென்று சந்தோஷமுற்றிருந்தனர். அப்பொழுது கனகசபாபதிப் பிள்ளையுடன் வந்த பரமேஸ்வரம் பிள்ளை என்னும் சிறுவன், தன் னுடைய காணுமற்போன அருமைக் குமாரனுடைய சாயலாக விருக்கக் கண்ட வேதவல்லியானவள் அச்சிறுவன் மீது பேரன்புகொண்டு அவனின் பூர்வசரித்திரத்தை ஞானப்பூங்கோதையினுல் அறிந்தாள். ஆயினும்சந்தேகமுண்டாகிக் கழுத்திலிருந்துஒரு இலச்சிலையினுல் தன் குமாரனெனத் தெரிந்து அச்சிறுவனைக்கட்டித் தழுவி ஆனந்தக் கண்ணீர் சொரிந்தனள். மற்றவர்கள் எல்லோரும் ஆச்சரியமடைந்தனர். சர்வலோகநாயகருடைய திருவிளையாடலை எவர் அறியவல்லவர். வேதவல்லியானவள் வெறுககப்பட்ட நாயகனுல் விரும்பப்பட்டு இழந்து போன குலக்கொழுந்தாகிய புத்திரனையும் பெற்றுக் கொண்டாள். "அவனின்றி அணுவும் அசையாது"

கோகிலாம்பாள் சிவகாமி என்னும் இருவரையும் வாசகர்கள் ஞாபகத்தில் வைத்திருப்பார்கள். இவர்கள் இருவரும் வேதவல்லி காணாமற்போன குமாரனைப் பெற்றதினத்தன்று சென்னையிலுள்ள கோமதி ஆற்றிற் சென்று ஸ்னானஞ் செய்தார்கள். அப்பொழுது கோகிலாம்பாள் கால்தவறி ஆற்றில் முழுகி அவதியுறும்போது பக்கத்தேநின்ற தனது ஆருயிர் நேசியாகியசிவகாமியைக்கட்டிப்பிடிக்க இருவரும் அமிழ்ந்து விட்டனர். அப்பொழுது அங்கு நின்றவர்களில் ஒருவன் திடீரென ஆற்றிற் குதித்து இருவரையும் மீட்டுக்கொண்டு வந்து பலவித சயித்தியோபசாரங்கள் செய்தும் பழிபாவங்களுக்கு இருப்பிடமாய் இரு உடலும் ஒரு உயிரும் போலிருந்த இருவரும் தாங்கள் கொண்ட நேசப் பாங்கைத் தங்களைப் போன்றவர்கள் கண்டு மதிக்கும்படி இங்கிலவுலகு வாழ்வை நீத்துப் பரலோகப் பிராப்தியாயினர். இச்சம்பவத்தை இரு வழிப்போர்கள் மாசிலாமணி முதலியாருக்கு அறிவிக்க, அவர் தனது ஆப்த நண்பன் கோபாலகிருஷ்ணனுக்கு அறிவித்து இருவரும் அழுதுபுலம்பிக்கொண்டு இரு பிணங்களையும் தத்தம் வீடுகளுக்குக் கொண்டுவந்து செய்யவேண்டிய அபரக்கிரியைகளைச் செய்து முடித்தனர். இருவரின் மனைவியர்களும் இறந்த மாமியர்களுக்காக அழுதுபுலம்பி அனுபவித்த துக்கத்தைஎம்மால் இதில்எழுத முடியாது. இப்பாவிகள் தொலைந்ததினால் கண்ணியம்பொருந்திய இரண்டுகுடும்பங்களும் இனிமேல் மேமேலோங்குமென உலகினர் சந்தோஷமுற்றனர். இத்துக்கங்காரணமாக ஐக்கியப் பிரவர்த்திச் சங்கம் தொடங்குவதற்காக நியமிக்கப்பட்ட மகாசபை அடுத்தமாசம் கூடுவதாக நிச்சயிக்கப்பட்டது. இது நிற்க.

தாசி தேனுமணியானவள் தனக்கு வந்த கன்மவிபாதிக்காளாகி நோய் வாய்ப்பட்டுச் சம்பாதித்த பொருள்களை யெல்லாம் வைத்தியர்களுக்குக் கொடுத்தும் நோய் மாறாமையினால் கையில் ஒரு சல்லிக்கும் வழியின்றிக் காணிபூமிகளையும் மெத்தை வீடுகள் பங்களாக்களையும் விற்றுச் செலவு செய்தும் நோய் மாறவில்லை. (இவள் விற்றஅசைவற்ற ஷிகாணி பூமி முதலியவைகளை ஏலத்தில் மாசிலாமணி முதலியாரே வாங்கிக் கொண்டனர்) தேனுமணி பொருளுக்கு வழியில்லாமல் அரசினர் தரும வைத்தியசாலையை

அடைந்து தருமவைத்தியஞ் செய்வித்து அங்கும் சுகம்பெறாமல், சோரநாயகர்கள் சுகமுடன் பிடித்த கொங்கைமேல் ஈக்கள் குழுமி மொய்க்கக்கிடந்து வருந்தி சிலநாளில் இறந்துவிட்டனள்.

கார்த்திகை மீ 15ந் திகதி சோமவாரத் தன்று சென்னை "இலட்சுமிவாசம்" என்னும் மகாமண்டபம் மேற்கட்டிகளாலும் பூமாலைகளாலும் அரம்பை, தோரணங்களாலும் நன்கு அலங்கரிக்கப்பட்டிருக்கின்றது. மண்டபத்தின் மத்தியில் ஒரு மேசையின்மீது இரத்தினக் கம்பளம் விரித்து, அதன்மேல் இரு மெழுகுவர்த்தி விளக்குகள் வைக்கப்பட்டிருக்கின்றன. அங்கு நிரைநிரையாக வைக்கப்பட்ட நாற்காலிகள் மீது இடையீடின்றிப் பிரபுக்களும் பண்டிதர்களும் கனவான்களும் வந்து குழுமினர். காந்தவிளக்கின் பிரபையினால் எங்கும் செகசோதியாக விருக்கின்றது. அப்பொழுது அங்கு வைக்கப் பட்டிருந்த கடியாரம் எட்டு மணி அடித்ததும் கனகசபாபதிப்பிள்ளை என்பவர் எழுந்து கைகூப்பி வணங்கி,

"காத லாகிக் கசிந்துகண் ணீர்மல்கி
யோது வார்தமை நன்னெறிக் குய்ப்பது
வேத நான்கினும் மெய்ப்பொரு ளாவது
நாத நாம நமச் சிவாயவே"

என்னும் நமச்சிவாயத்திருப் பதிகம் பாடி,

"பரசமயவிருள்கெடவேயுதித்தவனை,யிறைவனூற்பரவைதன்னுள்
விரவியவிலக்கணந்தருக்கமெனுமிருபுணையால்விளையாட்டுச்செய்
வாமுடையோன்றனையரன்றன்வடிவிலாவடிவைவழிபடுந்தூயோனைத்
திரமுடைநல்லூர்ச்சைவப்பிரசாரகோத்தமனைச் சிந்தைசெய்வாம்"

என்று குருவணக்கமுஞ் செய்து நிற்கச், சபையோர் யாவரும் எழுந்து கைகூப்பி வணங்கிநின்று பின் தத்தம் ஆசனங்களில் அமர்ந்தனர். அப்பொழுது சபையார்களுடைய அனுமதிப்படி ஹைகோர்ட்டு நீதிபதிகளில் ஒருவராகிய கனம்ஜஸ்டிஸ்ஈசசிங்காரவ் அவர்கள் அக்கிராசனராக நியமிக்கப்பட்டு அத்தானத்திற் சென்றிருக்க எல்லோரும் கரகோஷம் செய்தனர். சிறிது நேரம் பலவாத்

தியங்கள் வாசிக்கப்பட்டன. அதன்பின் அக்கிராசனாதிபதி அவர்கள் எழுந்து, அன்று சபைகூடிய காரணத்தைச் சிறிது சொல்லி, சபையீர்! இப்பொழுது ம-ா-ா ஸ்ரீ கோபாலகிருஷ்ணபிள்ளை அவர்களை "அன்பும் கண்ணப்பநாயனாரும்" என்னும் விஷயத்தைப் பற்றி உபந்நியாசஞ்செய்யும்படி கேட்டுக்கொள்ளுகின்றேன் என்று ஆசனத்தமர அப்பொழுது கோபாலகிருஷ்ண பிள்ளை அவர்கள் எழுந்து பிரசங்கமேடையில் நின்றனர் (சபையார் அனைவரும் கரகோஷம்:—

சபையார்களுக்கும் அக்கிராசனாதிபதிபவர்களுக்கும் வந்தனம். அறிஞர்களே!

எமக்குஇனியவர் என்று எம்மாலேதெளியப்பட்டவர்யாவரோ அவரிடத்தே எமக்கு விருப்பம் உண்டாகும். எமக்கு எவரிடத்தே விருப்பம் உண்டாகுமோ அவரிடத்தே அன்புண்டாகும். அன்பாவது தன்னால் விரும்பப்பட்டவரிடத்தே தோன்றும் உள்ளநெகிழ்ச்சி. ஆதலால் நாம் நமக்கு இனியவர்யாவரென்று ஆராய்ந்து நிச்சயிப்போம். பிதா மாதா பெண்டிர் புதல்வர் முதலிய உறவினரே எமக்கு இனியர் எனக் கொள்வமெனின, இவர்களுக்கும் நமக்கும் உள்ளதாகிய தொடர்பு நீர்க்குமிழிபோல நிலையில்லாததாகிய இவ்வுடம்பினால் ஆகியதாதலினாலும், இவ்வுடம்பு ஒழியவே இதனால் ஆகிய சம்பந்தமும் ஒழிதலானும் சரீரத்தினாலே தொடர்ச்சி உள்ள போதும், நாம் தீவினைப்பயனை அனுபவிக்கும் வழி இவ்வுறவினரே பகைவராகவும், நல்வினைப்பயனை அனுபவிக்கும்வழி இவர் அல்லாத பகைவரும் உறவினராகவும் காணுதலானும் இவர் உறவினராய் நின்ற வழியும் எமக்கு இதஞ்செய்தல் தம்பயன்கருதியன்றி எம்பயன் கருதாமையானும், இவர் எமக்கு இனியரென்று கொள்ளுதல் ஒருவாற்றானுங்கூடாது. நாமோ நம்மை ஒருக்காலும் பகையாமையானும் என்னாளும் துன்பத்தினின்றும் நீங்கி இன்பம் அனுபவித்தல்வேண்டும் என்னுங்கருத்தே எமக்கு உண்மையானும், நமக்குநாமே இனியமெனக் கொள்வமெனின், கேவலாவஸ்தையிலே ஆணவமலமறைப்பினாலே அறிவும் தொழிலும் உள்ள வழியும் அவை சிற்றறிவும் சிறுதொழிலுமன்றி முற்றறிவும் முற்றுத் தொழிலுமின்மையானும், அதனால் எமக்கு இன்பம் இது

துன்பம் இது, துன்பத்தினின்றும் நீங்கி இன்பம் பெறும் நெறி இது, என உள்ளபடி அறிந்து துன்பத்தினின்றும் நீங்கி இன்பத்தைப் பெறுதல் கூடாமையானும், எமக்கு நாமே இனியமெனக் கொள்ளுதலும் கூடாது. முற்றறிவு முற்றுத்தொழிலுடையவராகி, தம்பயன்குறியாது மலபெத்தர்களாகிய ஆன்மாக்கள்மேல் வைத்த பெருங்கருணைத்திறத்தினாலே, அவ்வான்மாக்களுக்குத் தனுகரணங்களைக் கொடுத்து ஆணவமலசக்தியைச் சிறிதுபோக்கி அறிவை விளக்கிப்போகங்களைப்புசிப்பித்து, மலபரிபாகமும் இருவினையொப்பும் சத்திநிபாதமும் செய்யும் பரமபதி ஒருவர் உண்மையானும், அவர் சிவனேயாதலானும், அவரே எமக்கு இனியவரெனக் கொள்ளல் வேண்டும். இக்கருத்தனைத்தும் நோக்கி யன்றோ திருநாவுக்கரசு நாயனாரும்

என்னில் யாரு மெனக்கினி யாரிலை
யென்னி லுமினி யானொரு வனுள
னென்னு ளே யுயிர்ப் பாய்ப்புறம் போந்து புக்
கென்னு ளே நிற்கு மின்னம்ப ரீசனே"

என்று கூறியிருக்கின்றனர். ஆகலால் சபையீர்! அச் சிவனையே நாமெல்லாம் விரும்பி, அவரிடத்து இடையறாது மெய்யன்பு செய்தல் வேண்டும் (கரகோஷம்)

அன்பானது, குடத்துள் விளக்கும் உறையுள் வாளும் போல, ஒருவர் காட்டிக் காணற் பாலதன்று. அவ்வன்புடைமையால் வெளிப்படும் செயல்களைக்கண்டவழி இவை உண்மையால், இங்கே அன்புண்டென்று அநுமிதித்துக் கொள்ளுதல்வேண்டும். அது:—

"அன்பிற்குமுண்டோவடைக்குந்தாழார்வலர்
புன்கணீர்பூசறரும்"

என்று திருக்குறளாலும்,

"சுரந்த திரு முலைக்கே துய்யதிரு ஞானஞ்
சுரந்துண்ட பிள்ளையெனச் சொல்லச் சுரந்த
தனமுடையா டென்பாண்டி மாதேவி தாழ்ந்த
மனமுடையா ளன்பிருந்த வாறு"

என்னும் திருக்களிற்றுப் படியாரானும் உணர்க. சிவபெருமானிடத்தே அன்புடைமைக்கு அடையாளம், அப்பெருமானுடைய பெருமையை நினைத்தல் காண்டல் கேட்டபொழுதே தன்வசமழிதலும், மயிர்க்கால்தோறும் திவலையுண்டாகப் புளகங் கொள்ளுதலும், ஆனந்த அருவிபொழிதலும், உரைதடுமாறலும், ஆடலும், பாடலும், அவர் உவப்பனசெய்தலும், வெறுப்பன ஒழித்தலும், பிறவுமாம்.

இந்த அன்பு இல்லாத வழிச் சிவபெருமானை அடைதல் ஒருவாற்றானும் கூடாது. அது.

"உள்ளமுள்கலந் தேத்தவல் லாற்கலாற்
கள்ளமுள்ளவ ருக்கருள் வானலன்
வெள்ள முமரவும்விர வுஞ்சடை
வள்ள லாகிய வான்மியூ ரீசனே"

எனவும்.

"நெக்கு நெக்கு நினைப்பவர் நெஞ்சுளே
புக்குநிற்கும் பொன்னார்சடைப் புண்ணியன்
பொக்க மிக்கவர்பூவுநீ ருங்கண்டு
நக்குநிற்பர வர்தமை நாணியே"

என்னும் திருநாவுக்கரசு நாயனார் தேவாரத்தாலும்,

தேவதேவன்மெய்ச் சேவகன் றென்பெருந் துறை நாயகன்
மூவராலு மறியொணாமுதலாயவானந்த மூர்த்தியான்
யாவராயினு மன்பரன்றியறி யொணாமலர்ச சோதியான்
றூயமாமலர்ச் சேவடிக்கணஞ் சென்னிமன்னிச் சுடருமே"

என்னும் திருவாசகத்தாலும்,

"என்பே விறகா விறைச்சி யறுத்திட்டுப்
பொன்போ லெரியிற் பொரிய வறுப்பினு
மன்போ டுருகி யகங்குழைந் தார்க்கன்றி
யென்பொன் மணியினையெய் தவொண் ணாதே"

என்னும் திருமந்திரத்தாலும்,

"அன்பேயென் னன்பேயென் றன்பாலழைத்திட்
டன்பேயென் பாக வறிவழியு—மன்பன்றித்
தீர்த்தந் தியானஞ் சிவார்ச்சனைகள்செய்யுமது
சாத்தும் பழமன்றே தான்"

என்னும் திருக்களிற்றுப்படியாரினும்,

"கருமமா தவஞ்செபஞ்சொல் காசறுமாதி ஞானம்
புரிபவர் வசமதாகிப் பெருந்திடேம் புரையொன் றின்றித்
திரிவறு மன்பு செய்வோர் வசமதாய்ச் சேர்ந்து நிற்போ [றும்
முரைசெய்வோ மவர்முன் னெய்தியவருளத்துறைவோ மென்

என்னும் வாயுசங்கிதையினும் அறிக.

இவ்வன்பு பல பிறப்புகளிலே பயன் குறியாது செய்த புண்ணியத்தினால் அருளிச் செய்யும் அப்பெருமான் அருளின்றி இவ்வன்பு ஒருவாற்றானும் உண்டாகாது. அது, [டாம்

"ஆங்கவனருளாற்பத்திநன் குண்டாம்பத்தியாலவனருளுண்
வீங்கியபத்தி பற்பல பிறப்பில் வேதங்களுரைத்திடும்படியே
தீங்கறு கரும மியற்றிய பலத்தாற் சிவனருள் செய்தி டவருமா
லோங்கியபத்தியாற்சிவ தருமமொழிவறப்புரிந்திடப்படுமால்"

எனவும்,

"அற்றுமன்றறியச்சுருக்கனுயுரைப்பினுபிறைபாகன்வார்கழலிற்
றெற்றெனவறிவாற்பத்திமைசெய்தல்வேண்டுமோற் சிறந்தடத்திமை
மற்றிணையில்லாமுத்தியெய்திடுமான்மாசிலா தாய பத்திமையு [யான்
முற்றிறைபாகனருளினலெய்தல்வேண்டுமான்மொழிந்திடுங்காலே"

எனவும் வரும் வாயுசங்கிதையிற் கூறுமாற்றானுமுணர்க.

இடையறாதுள முருகி வளரும் அன்பின் முதிர்ச்சியினாலே சிவம் விளங்கும்; ஆதலால் அன்பும் சிவமும் இரண்டற அபேதமாய் நிற்கும். அன்பு முதிர்ச்சியிலே சிவம் விளங்குமென்பதற்குப் பிரமாணம் திருவாசகம் "பத்திவலையிற் படுவோன்காண்" எனவும்,

"அம்மையே யப்பா வொப்பிலாமணியே
யன்பினில் விளைந்தவா ரமுதே
பொய்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்
புழுத்தலைப் புலையனேன் றனக்குச்

செம்மையே யாயசிவபத மளித்த
செல்வமே சிவபெரு மானே
யிம்மையே யுன்னைச் சிக்கெனப் பிடித்தே
னெங்கெழுந் தருளுவ தினியே"

எனவும், திருக்களிற்றுப்பாடியார்

"ஆரேனு மன்புசெயி னங்கேதலைப் படுங்கா
ணாரேனுங்காணவரன்"

எனவும் வரும்.

அன்பும் சிவமும் அபேதமாம் என்பதற்குப் பிரமாணம் திருமந்திரம்,

அன்பு சிவமிரண் டென்ப ரறிவிலா
ரன்பே சிவமாவ தாரு மறிகில
ரன்பே சிவமாவ தாரும றிந்தபி
னன்பே சிவமா யமர்ந்திருப் பானே"

எனவும் திருவாசகம்.

'மாறிநின் றென்னைமயக்கிடும்வஞ்சப்புலனைந்தின்வழியடைத்தமுதே
யூறிநின் றென்னுளெழுபரஞ் சோதி யுள்ளவாகாணவந் தருளாய்
தேறலின்தெளிவேசிவபெருமானே திருப்பெருந்துறையுறைசிவனே
யீறிலாப்பதங்கள் யாவையுங் கடந்தவின்பமேயென் னுடையன்பே"

இத்துணைப் பெருஞ் சிறப்பினதாகிய இவ்வன்புடைமையிலே தமக்கு உயர்வொப்பின்றி விளங்கிய பெருந்தகையினர், அறுபத்து மூன்று நாயன்மார்களில் ஒருவராகிய கண்ணப்ப நாயனார். இவர் வேதாகமங்களைக் கற்றல் கேட்டல் சிறிதும் இல்லாத வேட்டுவச் சாதியிற் பிறந்தும் எங்ஙனம் சிவபெருமானிடத்து மெய்யன்புடையாராயினர் என்னும் ஆட்சேபம் நிகழ்ந்தாலோ அதற்குச் சமாதானம்; இவர் முற்பிறப்பில் வேதாகமங்களை ஓதியுணர்ந்து சிவபெருமானைத் தமது மனம் வாக்குக் காயங்களினாலே சிரத்தையுடன் உபாசித்தமையேயாம். இதற்குப் பிரமாணம் திருத்தொண்டர் பெரியபுராணம் கண்ணப்ப நாயனார் சரித்திரம்.

"முன்புசெய்தவத்தினாலே முடிவிலாவின்பமான
வன்பினை யெடுத்துக் காட்ட."

என்பதனால் அறியலாம். இம்மகான் முற்பிறப்பிலே பஞ்சபாண்டவருள் ஒருவராகிய தநஞ்சயரேயாம். பாசுபதாஸ்திரம் பெறவேண்டிப் பெருந் தவஞ்செய்த தநஞ்சயரோடு கருணாகராகிய கைலாசபதி கிராத வடிவங்கொண்டு வந்து விற்போர் செய்து, அவரது வில்லினால் அடிபட்டுப் பின் அவரைத் தீண்டிமற்போர் செய்து, பின்னர்த் தமது வடிவத்தைக் காட்டினர். அதுகண்ட தநஞ்சயர் பெருமானைத்தொழுது தமக்கு முத்தியருளும்படி பிரார்த்தித்தார். அதுகேட்ட சிவபெருமான், "நீ சத்துருக்களை நாசஞ் செய்தற் பொருட்டுப் பாசுபதாஸ்திரம் பெற நினைத்து தவஞ் செய்தாய், ஆதலால் இப்பொழுது அதுவே தருவேம் என்று கொடுத்தருளி நீ என்னை வேடன் என்று இகழ்ந்தமையால் வேட்டுவராசனாகப் பிறந்து தக்ஷிண கைலாசமாகிய காளத்தி வரையை அடைந்து அன்பு வடிவங் கொண்டு, நம்மைப் பூசித்து, பன்றி முதலிய விலங்குகளைக்கொன்று, அவற்றின் மாமிசத்தை எமக்கு நிவேதிப்பாய். அந்நாளிலே உனக்கு முத்தி தந்தருளுவேம்" என்று திருவாய் மலர்ந்தருளினர். இச்சரித்திரம் திருக்காளத்திப் புராணத்தால் நன்கு அறியலாம்.

செந்தமிழ்ச் செல்வர்காள்!

நாயகி நாயகனது பெயர் கேட்டவுடன் வசமழிதல் தலையன்பும், அவனைக் கண்டவுடன் வசமழிதல் இடையன்பும், அவனைக் கூடினவுடன் வசமழிதல் கடை யன்புமாம். அவ்வாறே பக்குவான்மா சிவபெருமானுடைய பெயர் கேட்டவுடனே வசமழிதல் தலையன்பும், அவரைக் கண்டவுடனே வசமழிதல் இடையன்பும், அவரைக் கூடினவுடனே வசமழிதல் கடையன்புமாம். நாயகனது பெயர் கேட்டவுடன் வசமழியும் தன்மையையுடைய நாயகிக்கு அக்கேட்டலோடு காண்டல் கூடல்களும் நிகழ்ந்த வழி முறுகி வளரும் அன்பின் பெருக்கம் இத்துணைத்தென்று கூறுதல் கூடாதன்றோ! அது போலவே,

"சேணுயர் திருக்காளத்திமலைமிசை யெழுந்து செவ்வே
கோணமில் குடுமித் தேவரிருப்பர் கும்பிடலாம்"

என்று நாணன் கூறியமை கேட்டவுடன் வசமழிந்த தலைபன்மையுடைய இந்நாயனாருக்கு அக்கேட்டலோடு சிவலிங்கப் பெருமானைக் காண்டல் கூடல்களும் நிகழ்ந்த வழி, முறுகிவளர்ந்த அதிதீவிரமாகிய அன்பின் பெருக்கத்தை இத்துணைத்தென்று கூற முடியாது.

கண்ணப்ப நாயனார் சிவனது சட்சுதீட்சையினாலே பசுத்துவம் நீங்கி சிவத்துவம் பெற்றார். அது,

"திங்கள்சேர் சடையார் தம்மைச் சென்றவர் காணு முன்னே
யங்கணர் கருணை கூர்ந்த வருட்டிரு நோக்க மெய்தித்
தங்கிய பவத்தின் முன்னைச் சார்புவிட் டகல நீங்கிப்
பொங்கிய வொளியி னீழற் பொருவிலன் புருவமானார்"

என்பதனாலும்,

"முன்புதிருக் காளத்தி முதல்வனா ருருநோக்கி
னின்புறவே தகத் திரும்பு பொன்னானாற் போல் யாக்கைத்
தன்பரிசும் வினையிரண்டுஞ் சாருமல மூன்றுமற
வன்புபிழம் பாய்த் திரிவா ரவர்கருத்தி னளவினரோ"

என்பதனாலும் உணர்த்தப் பட்டது.

பத்தியாவது மந்ததரம், மந்தம் தீவிரம், தீவிரதரம் என நன்கு வகைப்படும். அரக்கானது வெய்யிலின் முன் இருந்து வெதும்புதல் போல்வது மந்ததரபத்தி. மெழுகானது வெய்யிலுக்கு எதிர்ப்படின் உருகுதல்போல்வது மந்தபத்தி. நெய்யானது சூட்டுக்கு உருகுதல் போல்வது தீவிரபத்தி. தைலதாரையானது சிறிதும் இடையறாது ஒழுகுதல் போல்வது தீவிரதரபத்தி. இவாது பத்திதீவிரதரமேயாம். இவர் சிவலிங்கப் பெருமானைக் கண்டவுடனே நிகழ்ந்த செயல்களாலே தெளியப்படும். அச்செயல்கள்,

"மாகமார் திருக்காளத்திமலையெழுகொழுந்தாயுள்ள
வேகநாயகரைக் கண்டாரெழுந்த பேருவகை யன்பின்
வேகமானதுமேற்செல்ல மிக்கதோர் விரைவினோடு
மோகமாயோடிச் சென்றார் தழுவினார் மோந்து நின்றார்

நெடிதுபோதுயிர்த்து நின்று நிறைந்தெழுமயிர்க்காற்றூறும்
வடிவெலாம் புளகம் பொங்க மலர்க்கணீரருவிபாய
வடியனேற்கிவர் தாமிங்கே யகப்பட்டாரச்சோவென்று
படியிலாப் பரிவுதானோர்படிவமாம் பரிசு தோன்ற"

என்னும் திருவிருத்தங்களாலறிக.

இவர் சுவாமியைக் கண்ட வழி வணங்குதல் பயின்றறியாத வராகலானும், தாய் தந்தையர் தங்களுக்கு இனிய பிள்ளைகளைக் கண்டவுடன் பேராசையினால் மிக விரைந்து ஓடிப்போய், தழுவி மோத்தல் உலகியற்கை யாகலானும் தமக்கினியராகிய சுவாமியைக் கண்டவுடனே அதிவேகமாய் விரைந்தோடிச் சென்று தழுவி மோந்தார் என்க. இவர் தம்மினும் சிவனை தமக்கு இனியராக அது பற்றி யெழுந்து முறுகிவளர்ந்த அன்பே வடிவமாயினர். அது இவர் திருக்காளத்தி மலையை அணுகு முன் பெரும்பசியால் வருத்தமுற்று,சிவலிங்கப் பெருமானைக் கண்ட பின் இவருக்கு அவ்வருத்தமென்பது சிறிதும் தோன்றாமையானும், சிவபெருமான் துஷ்ட மிருகங்கள் திரியும் காட்டிலே தனித்திருத்தலால் அவரைத் தாம் பிரியமாட்டாமையையும் அவருக்கு அமுதுசெய்ய இறைச்சியின்மையால் அதன் பொருட்டுத் தாம் பிரிய வேண்டின மையையும் குறித்து இவருக்கு எழுந்த பதைப்பு மிகுதியினானும் தெளிக. அப்பதைப்பும் அதனாலுண்டாகிய செயல்களும் இங்கே "வெம்மறக்குலத்து வந்துதித்த"என்பது முதல் "முன்பு நின்றரிதி னீங்கி"என்பது இறுதியாயுள்ள இவர் புராணத்திலேயுள்ள எட்டுத் திருவிருத்தங்களினாலும் நன்கு அறியலாம்.இன்னும்இவர்சிவபெருமானைக் கண்ட நாள் முதல் ஆறு நாளும் பசி நித்திரை யென்பன இவருக்குச் சிறிதும் தோன்றாமையானும், காடன் என்பவன் தம்மோடு பேசினமையையும், அவனும் நாணன் என்பவனும் தம்மை விட்டுப் போயினமையும், தந்தையாகிய நாகன் முதலியோர் வந்து தம்மோடு பேசினமையையும்,தம்மைப் பிரிந்தமையும், பிறவும் இவருக்குச் சிறிதும் விளங்காமையானும், இவர் இடையறாது ஒழுகும் தைலதாரைபோல ஆசையோடாக்கை ஆனந்தமாய்க் கசிந்துருகும் அன்புருவமேயாயினர் என்பது ஐயந்திரிபற உணரப்படும்.

சிவன் உவப்பன செய்தலும் வெறுப்பன ஒழிதலும் அவரிடத்து அன்புடைமைக்கு அடையாளம் என்றீர். சுவாமிக்கு யாகத்

தில் அன்றிப் பிறவழியில் மாமிசம் நிவேதித்தலும் வாயிற் கொண்டு வரும் நீரால் அபிடேகம் செய்தலும், காற்செருப்பினுலே திருமுடியில் நிருமாலியங்கழித்தலும், தலைபிற் சூட்டிய பூக்களைச் சாத்துதலும், ஆகிய இவைகள் நினைப்பினும் எண்ணிறந்த காலம் மிகக் கொடியநரகத்துன்பம் பயக்குமன்ரோ? அங்ஙனமாக இவர் இப்பிறப்பில் ஓர் ஆசிரியரை அடைந்து, இது புண்ணியம் இது பாவம் இது செயற்பாலது இது ஒழிதற்பாலது என்று ஒருக்காலும்கேட்டறிந்தவருமல்லர். முற் பிறப்பில் செய்த சிவபுண்ணிய மிகுதியினுலேதாம் சிவலிங்கப்பெருமானைத்தரிசித்தபொழுது திருமுடியிலேநீர் வார்த்து மலரிட்டுஇருத்தல்கண்டமையாலும் ஒருபார்ப்பான்பாலோகொண்டு வந்து ஊட்டினுனென்று கேட்டமையானும் அவர் மாட்டு முறுகி வளர்ந்த அன்பினுலே இவையே சுவாமிக்கு உவப்பனஎன்று துணிந்து, அவ்வாறுசெய்ய நினைந்து தமக்குமுன் இனிய தாயுள்ளது மாமிசமே ஆதலால் அதுவே சுவாமிக்கும் இனியதாம் என்றுமாமிசத்தைவாயில் தங்கள்குலாசாரப்படி அதுக்கிச்சுவைபார்த்து இனியவற்றைப் படைத்தலும்,பாத்திரம்இல்லாமையால் அபிஷேகத்துக்குத் தண்ணீர் வாயில் எடுத்துக் கொள்ளுதலும், ஒருகையில் தேனோடு கலந்த மாமிசம் பொருந்திய கல்லையும் மற்றக்கையில் அம்பும்இருத்தலால் புஷ்பங்களைத் தலையில் வைத்தலும், திருமுடியில் நிருமாலியத்தைக் காற் செருப்பாற் கழித்தலும் செய்தனர். இன்னும் தாம் மாமிசம் உண்டல்போலச் சுவாமியும் உண்பர் என்று நினைத்து,

"கொழுவியதசைகளெல்லாங் கோலினிற்றெரிந்து கோத்தங்
கழலுறுபதத்திற்காய்ச்சிப்பல்லினலதுக்கி நாவிற்
பழகிய வினிமைபார்த்துப் படைத்தவிவ்விறைச்சிசால
வழகிது நாயனீரே யமுது செய்தருளும்"

என்று வேண்டிக்கோடலும், சிவபெருமான் முடிவிலாற்றலுடையரென்பதுநோக்காது, நீர் துணையின்றித் தனித்திருக்கின்றீரே என்று நித்திரையின்றி இராமுழுதும் எதிர்நின்றுகாத்தனர். இவையெல்லாம் முற்பிறப்பிற்செய்த சிவபுண்ணியமிகுதியினுல் சிவபெருமான் மாட்டு எழுந்து இடையறாது மேன்மேலும் முறுகிவளர்ந்த அன்பின் பெருக்கத்தினுலே செய்யப்பட்டமையினுல், அவருக்குமிக உவப்பாயின. இது சிவன், சிவகோசரியாருக்குத் திருவாய் மலர்ந்தருளிய பொருளையுடைய "அவனுடைய வடிவெல்லாம்" என்பது

முதல் "உனக் கவன்றன் செயல்காட்ட" என்பது இறுதியாகவுள்ள வழு செய்யுட்களால் அறிக. இன்னும்

"பொருட்பற்றிச் செய்கின்றபூசனைகள்போல் விளங்கச்
செருப்புற்ற சீரடிவாய்க்கலசமூனமுதம்
விருப்புற்ற வேடனார் சேடறிய மெய்குளிர்ந்தங்
கருட்பெற்று நின்றவாதேணோக்க மாடாமோ"

என்னும் திருவாசகத்தானுமுணர்க. பேய்பிடியுண்டாரதுசெயலெல்லாம் பேயின் செயலாதல்போல, பசுபோத மற்றுச் சிவபோதமுற்ற இந் நாயனாரது செயலெல்லாம் சிவன்செயலேயாம் என்பது தேளிக.

சிவபெருமானது திருக்கண்களில் உதிரநீர்பாயக் கண்டபொழுது இவருக்குண்டாகிய பதைப்பு மிகுதியும், தமது கண்ணைத் தாமே இடக்கும் போதும் இவருக்குச் சிறிதாயினும் வருத்தந் தோன்றாமையும், அக்கண்ணைச் சிவனுடைய கண்ணில் அப்பினவுடனே உதிர நீர் நிற்கக் கண்டமையால் எழுந்த ஆனந்தமிகுதியும் சிவனது மற்றக் கண்ணினும் உதிர நீர் பாயக்கண்டு தமது மற்றக்கண்ணை இடக்கும் போதும் சுவாமி கண்ணில் உதிரம் நிற்கும் என்னும் துணிவினாற் பிறந்த விருப்பமும், இவருக்குச் சிவன்மாட்டுள்ள அன்பே இன்பமாம் என்பதைத் தெளிவுறவிளக்குகின்றன. அன்பே இன்பம் என்பது "அன்பின லடியே னாவியோடாக்கையானந்தமாய்க்கசிந்துருக" என்று திருவாசகத்தினும் "முடிவிலாவின்பமான வன்பினையெடுத்துக்காட்டி" என்று இவரது புராணத்தாலும் "இறவாதவின்பவன்பு வேண்டி" என்றுகாரைக்காலம்மையார்புராணத்தினும், கூறுமாற்றானும், அனுபவத்தானும் உணர்க.

கண்ணப்ப நாயனாரது உயர்வொப்பில்லாத பேரன்பை எம்போலிகளும் உணர்ந்து தம்மாட்டு அன்புசெய்து உய்தற்பொருட்டு, சிவகோசரியாருக்கு வெளிப்படுத்தப் புகுந்த மபாகருணாநிதியாகிய சிவன், இவர் தமதுமற்றக்கண்ணையும் இடக்கும் பொருட்டு அம்மை ஊன்றும்போது, தரிக்கலாற்றாதவராகிததமது விபத்திஸ்தானமாகிய இலிங்கத்திற்றோற்றிய திருக்கையினாலே இவர்கையை அன்போடு பிடித்துக்கொண்டு "நில்லுகண்ணப்ப நில்லுகண்ணப்ப வென்னன்புடைத் தோன்ற னில்லுகண்ணப்ப" என்று திருவாய்மலர்ந்தருளினார். இதனால் இந்நாயனாரது அன்பிற்கும் சிவபெருமானது திருவருட்கும் உயர்வொப்பின்மைதெளிக.

இதுகாறுங் கூறியவாற்றால் சிவன்மாட்டுள்ள அன்பே பேரின்பம் என்பதும் அவ்வன்புடைமையிலே தமக்கு உயர்வொப்பில்லாதவர் இக்கண்ணப்ப நாயனார் என்பது தெள்ளிதிற்றுணியப்படும்.

சபையார்களே! புல்லறிவினனாகிய யான் இதுகாறும் ஏதோ தெரிந்தவரை சிறிதுசொன்னேன். இதில் உள்ள குற்றத்தை நீக்கிக் குணத்தை அங்கீகரிக்கும்படி உங்கள் எல்லோரையும்நமஸ்கரிக்கின்றேன். (கரகோஷம்)என்றுகூறித்தனது ஆசனத்தமர்ந்தனன். பிரசங்க முடிவிலும் கநகசபாபதிபிள்ளையால் தேவாரம் ஓதப்பட்டுக்கூட்டம் சமாப்தியாயிற்று. அங்கு வந்திருந்தோ ரனைவரும் தத்தம் இருப்பிடம்சென்றனர். நமது நண்பர்களாகியகநகசபாபதிபிள்ளைகோபால கிருஷ்ணபிள்ளை மாசிலாமணி முதலியார் ஆகிய இருவரும் தத்தம் இருப்பிடங்களுக்குச் சென்றனர். காலஞ்சில சென்றது பிரமாதி ௵ ஆவணிமீ 24-ந்திகதி மாசிலாமணி முதலியாருடைய அருமைக் குமாரனாகிய பரமேஸ்பரமுதலியாருக்கும் கோபால கிருஷ்ணனுடைய புத்திரி சிவகாமசௌந்திரி அம்மைக்கும் விதிவழுவாது விவாகம் நடைபெற்றது.

ஒருநாள் வேதவல்லி ஞானப்பூங்கோதை நாகரெத்தினம் ஆகிய மூவரும் சமுத்திரக்கரை சென்று அவ்விடத்தில் இருந்து காற்று வாங்கிப்பொழுது போக்கிக் கொண்டிருக்கும் பொழுது வேதவல்லி,ஞானப் பூங்கோதையைப்பார்த்து"அண்ணி! பொழுது போகட்டும்; ஒரு கதை சொல்லுங்கள் என அவள்"மச்சாள்!உனது சரித்திரத்தை எழுதிய ஆசிரியர் எழுதிவைத்திருக்கும் "இராச விக்கிரமன்"என்னும் சரித்திரத்தைக்கூறுகிறேன். கேட்பாயென்று பின்வருமாறு கூறுகின்றாள்.

வாழியா மறையோர் வாழி மன்னவர் செங்கோல் வாழி
வாழி நல்லருட்பா வாழி வான் பெருஞ் சைவம் வாழி.
வாழியே ருழவர் வாழி மாதமும் மாரி வாழி
வாழி நம் நாவலன்றன் மலரடி வாழி வாழி.

சற்குரு நாதன் திருவடி வாழ்க.

முற்றிற்று.